பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 25 செவ்வாய்க்கிழமை 08.05.2018 கதிர் 183

## மஹிந்தவுடன் இணைந்தார் பண்டு எம்.பி.

கொழும்பு, மே 08

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

பக்கம் 14 >>>

# வடக்கு அரசின் ஏற்பாட்டிலேயே முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

## முதலமைச்சர் விக்கி நேற்று அறிவிப்பு


(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 08

**"மே - 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வைக் கடந்த 3 ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்டது போன்று வடக்கு மாகாண சபையே இம்முறையும் நடத்தும். அதில் பல்வேறு பொது அமைப்புக்களும் பங்கேற்கும். யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் வேண்டுமானால் எம்முடன் இணைந்து கொள்ளலாம்."**

**- இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் உறுதிபடத் தெரிவித்தார்.**

பக்கம் 14 >>>



## புதிய கட்சி, எம்.பி. பதவி; தகுந்த தருணம் அறிவிப்பு

### முதல்வர் விக்கி தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 08

புதிய கட்சி தொடங்குவது, கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக வருவது என்பன தொடர்பில் சரியான நேரம் வரும்போதுவிளக்கமளிக்கப்படுமென வ்டக்கு முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன்தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பான கலந்துரை

பக்கம் 14 >>>

## தன்னைக் கைது செய்யுமாறு கோரும் பாலித

கொழும்பு, மே 06

பிரதியமைச்சர் பாலித தேவரப்பெரும தன்னைக் கைது செய்யுமாறு கோரிப் புளத்சிங்கள பொலிஸ் நிலையத்துக்கு எதிரில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

அண்மையில் இந்த

பக்கம் 14 >>>

## மன்னார், வவுனியா, முல்லைக்கு சிங்கள அலுவலர்கள் வேண்டாம்

### அவர்களை யாழுக்கு அனுப்புங்கள் என்கிறார் முதல்வர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 08

தமிழ் இடங்களுக்குச் சிங்கள அலுவலர்களையும் சிங்கள இடங்களுக்குத் தமிழ் அலுவலர்களையும் நியமிப்பதாயின் தமிழ் இடங்களுக்கு நியமிக்கப்படும் சிங்கள அலுவலர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைக்கின்றேன். அவர்கள் இங்கிருந்து வேலை செய்யட்டும். மன்னார், வவுனியா, முல்லைத்தீவுக்கு அவர்கள் தேவையில்லை. அங்கு எமது தமிழ் அலுவலர்கள் வேலை செய்யட்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்கினேஸ்வரன்.

பக்கம் 14 >>>

## விக்கிக்கு வந்த ஆசை

யாழ்ப்பாணம், மே 08

'என்னை ஜனாதிபதியாக்கி விடுங்கள்' என்று ஊடகவியலாளர்களிடம் நேற்றுக் கோரினார் வடக்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகப் போகிறீர்களா? என

பக்கம் 14 >>>

## லஞ்சம் பெற்ற அதிகாரிகளை பிரதமரே சிக்க வைத்தாராம்!

கொழும்பு, மே 08

இந்திய நிறுவனத்திடம் இலஞ்சம் பெற்றுக்கொண்டபோது கைதாகிய ஜனாதிபதியின் தலைமை அதிகாரி மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆகியோரைச் சிக்க வைக்கும் திட்டத்துக்குப் பிரதமர் செயலகமே இந்திய நிறுவனத்துக்கு ஆலோசனை வழங்கியது எனச் சர்வதேச ஊடகம் ஒன்று செய்தி

பக்கம் 14 >>>



## ஆவா குழு வாள்வெட்டில் இரண்டு பேர் படுகாயம்!

### நீர்வேலியில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம், மே 08

நீர்வேலிப் பகுதியில் வைத்து இருவர் மீது வாள்வெட்டு நடத்தப்பட்டுள்ளது. வாள்வெட்டுக்கு இலக்காகிய இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலை அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆவா குழுவின் தலைவர் தலைமையிலான 8 பேரை இந்த வாள்வெட்டை மேற்கொண்டனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நீர்வேலி செம்பாட்டுப்

பக்கம் 03 >>>

## அரசியல் தலையீடின்றி மே – 18 நினைவேந்தல்

### கேப்பாபிலவு மக்கள் கோரிக்கை



அரசியல் தலையீடு இன்றி யாழ். பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்துமுள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்த வேண்டும் எனக் கேப்பாபிலவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பக்கம் 14 >>>

## 2020 அரசியலிலிருந்து ஓய்வு பெறவேமாட்டேன்!

### ஜனாதிபதி நேற்றுத் திட்டவட்டம்

மட்டக்களப்பு, மே 08

2020 ஆண்டுடன் அரசியலில் இருந்து ஓய்வுப்பெறப் போவது இல்லை எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாட்டுக்கான ஆற்றவேண்டியபணிகள் இன்னும் எஞ்சியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்

பக்கம் 03 >>>

## இனியும் இது ரகசியம் அல்ல!

இவ்வருட இறுதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது முதலமைச்சர் வேட்பாளர்களாக 'பிக் - பொஸ்' பல பேர் களமிறங்குவர் என்றுதெரிகின்றது. பல முனைப் போட்டி நிச்சயம் எனவும் தகவல்கள் கூறுகின்றன.

மாவை சேனாதிராசா, நீதியரசர் சி.வீ.விக்னேஸ்

பக்கம் 03 >>>

## மஹிந்த தரப்பின் மே தினம் காலியில்

கொழும்பு, மே 08

மஹிந்த ஆதரவு பொது எதிரணியின் மே தின ஊர்வலம் காலியில் நேற்று நடைபெற்றது.

காலி சமனல மைதானத்தை நோக்கி, நாடாளுமன்ற உறுப்பினர்

பக்கம் 14 >>>

## இளைஞர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்தும் நிலை ஏற்படக்கூடாது!

### மட்டு மேதின உரையில் ஜனாதிபதி

மட்டக்களப்பு, மே 08

வடக்கு - கிழக்கு உள்ளிட்ட நாட்டின் இளைஞர்கள் மீண்டும் துப்பாக்கி ஏந்தாத நிலையை ஏற்படுத்தவேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால

பக்கம் 14 >>>



# மலேசியாவில் கைதாகிய இலங்கையர்கள் இரண்டு சட்டங்களின் கீழ் தடுத்து வைப்பு!



கொழும்பு, மே 08

ஆஸ்திரேலியா, நியூசிலாந்துக்கு செல்ல முயன்ற போது எண்ணெய்த் தாங்கி கப்பல் ஒன்றில் வைத்து மலேசிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட 131 இலங்கையர்கள் தொடர்பாகவும், கோலாலம்பூரில் உள்ள இலங்கைத் தூதரகம் கவனம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பாக இலங்கைத் தூதரகம், மலேசிய அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளதுடன், இணைந்து பணியாற்றி வருகிறது என்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, கைது செய்யப்பட்ட 131 இலங்கையர்களும், ஜோஹோர் பாரு மாகாணத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று மலேசிய காவல்துறையின் சிறப்பு பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

கைது செய்யப்பட்ட 131 இலங்கையர்களில், 127 பேர், 1959/63 குடிவரவுச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, ஜோஹோர் பாரு மாகாணத்தில் உள்ள பீகன் நேனாஸ் குடிவரவுதடுப்புநிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய நான்கு இலங்கையர்கள், 2007ஆம் ஆண்டின் ஆள்களைக் கடத்துவதற்கு எதிரான, மற்றும் குடியேற்றவாசிகள் கடத்தலுக்கு எதிரான சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், கைது செய்யப்பட்ட இலங்கையர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கைது செய்யப்பட்ட 131 பேரில், 43 பேரிடம், அகதிகளுக்கான ஐ.நா முகவர் அமைப்பினால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் இருக்கின்றன என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கபீர் ஹாஷிமுக்கு அறுவைச் சிகிச்சை!

கொழும்பு, மே 08

திடீர் சுகவீனமுற்ற நிலையில் கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையொன்றில் சேர்க்கப்பட்ட ஐ.தே.க. தவிசாளரான அமைச்சர் கபீர் ஹாஷிமுக்கு அறுவைச் சிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு திடீரென ஏற்பட்ட சுகவீனத்தை அடுத்து கபீர் ஹாஷிம், கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையின் அவசிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.



அவரது நிலை தேறி வருகிறது என்றும் ஐ.தே.க. வட்டாரங்கள் நேற்று முன்தினம் தகவல் வெளியிட்டன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் காலை மருத்துவமனைக்குச் சென்று கபீர் ஹாஷிமைச் சந்தித்திருந்தார்.

அதேவேளை, கபீர் ஹாஷிமுக்கு தொண்டையில் அறுவைச் சிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்படவிருக்கிறது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மன்னாரில் மின்னல் தாக்கி 3 வீடுகள் சேதம்

மன்னாரில் நேற்று அதிகாலை ஏற்பட்ட கடும் இடி மற்றும் மின்னல் தாக்கத்துக்கு உட்பட்டு 3 வீடுகள் சேதமாகியுள்ளன.

மூதூர்வீதி மற்றும் சாவக்கட்டு பகுதியில் உள்ள மூன்று வீடுகளே இவ்வாறு மின்னல் தாக்கத்துக்கு உட்பட்டுள்ளன.

இதன்போது, குறித்த வீடு களில் உள்ள பெறுமதிமிக்க மின்சாதனப் பொருட்கள் சேதமடைந்துள்ளதோடு, வீட்டு மின் இணைப்புக்களும், வீட்டு உடைமைகளும் சேதமடைந்துள்ளன.

வீடுகளில் அனைவரும் உறக்கத்தில் இருந்தபோதே இந்த விபத்து சம்பவித்துள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. மேலும், விபத்தின் பின்னர் மன்னார் பொலிஸார், இராணுவத்தினர், பிரதேச செயலக அதிகாரிகள், மாவட்டச் செயலக அதிகாரிகள், அனர்த்த முகாமைத்துவ பிரிவு அதிகாரிகள் ஆகியோர் பாதிக்கப்பட்ட வீடுகளுக்குச் சென்று பார்வையிட்டு சேத விவரங்களை பெற்றுக்கொண்டுள்ளனர்.

## வவுனியாவில் பனை வளத்தை காப்போம்: விழிப்புணர்வு நிகழ்வில் இளைஞர்கள்!



வவுனியா, மே 08

'பனை வளத்தை காப்போம்' என்னும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்றை வவுனியா சுயாதீன இளைஞர் அமைப்பு முன்னெடுத்துள்ளது.

நேற்றுக் காலை வவுனியா, நெளுக்குளம் பிள்ளையார் ஆலயம் அருகில் உள்ள பனந் தோப்பு பகுதியில் இந்த விழிப்புணர்வு செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் மக்களின் அடையாளமாக விளங்குகின்ற பனைவளம் அழிக்கப்பட்டு வருவதால் நீர்பற்றாக்குறை ஏற்பட்டு வறட்சி நிலை ஏற்பட்டு வருகின்றது.

அதை நம்பிய குடும்பங்களின் சுயசார்பு பொருளாதார கட்டமைப்பும் சீர்குலைந்துள்ளது. இதனால் பனை வளத்தை காத்து எமது இருப்பைப் பாதுகாப்போம் எனத் தெரிவித்தே இளைஞர்கள் இந்த விழிப்புணர்வு செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதன்தொடர்ச்சியாக வடக்கு இளைஞர்கள் பலர் ஒன்று கூடி மாலை வேளை மன்னார், நானாட்டான் பகுதியிவல் நுங்குத்திருவிழா என்னும் பெயரில் பனைசார் உற்பத்திப் பொருள்கள், பனம்பொருள்களுடன் விழிப்புணர்வு செயற்றிட்டத்தை முன்னெடுத்தனர். (க-100)

## ஐ.தே.கவின் மே தின பேரணியை முக்கிய பிரமுகர்கள் புறக்கணிப்பு



கொழும்பு, மே 08

கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுமுன்தினம் நடத்தி மே தினப் பேரணியில் கட்சியின் முக்கிய தலைவர்கள் பலர் கலந்து கொள்ளவில்லை.

இலங்கையில் மே தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி நேற்று முன்தினம் கொழும்பு, சுகததாச உள்ளரங்கில் மேதினக் கூட்டத்தை நடத்தியது.

கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடந்த இந்தப் பேரணியில், ஐ.தே.கவின் தவிசாளரான கபீர் காஷிம், உபதலைவர் ரவி கருணாநாயக்க, அமைச்சர் சாகல ரத்நாயக்க, இராஜாங்க அமைச்சர்கள் வசந்த சேனநாயக்க, ரஞ்சன் ராமநாயக்க, பாலித ரங்க பண்டார, பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமிந்த விஜேசிறி, பந்துல பண்டாரிகொட உள்ளிட்ட பலரும் கலந்துகொள்ளவில்லை.

கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் மீது அதிருப்தி கொண்டுள்ளதால் ஐ.தே.கவின் மே தினக் கூட்டத்தைகட்சியினர்பலரும் புறக்கணிக்கவுள்ளனர் என ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## வவு.நகரபிதா அரச அதிகாரிகளுடன் அவசர சந்திப்பு

வவுனியா, மே 08

வவுனியா நகரபிதா இ. கௌதமன் அதிரடியாக சில அரச அதிகாரிகளுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டுள்ளார்.

வவுனியா நகரபிதாவாகப் பொறுப்பேற்ற இ.கௌதமன் நகரின் துரித அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளும் நோக்குடன் அரச திணைக்களங்களின் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இந்த நிகழ்வு வவுனியா பொது நூலக கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நகரபிதா கௌதமன் தலைமையில் இடம்பெற்றது.

நகரசபை செயலாளர் தயாபரன், நகரபிதாவின் ஆலோசகர் சஜீந்திரா ஆகியோருடன் மாவட்ட அரச திணைக்களங்களின் உயரதிகாரிகளும் கலந்து கொண்டிருந்ததுடன் நகரின் துரித அபிவிருத்திக்குரிய சில திட்டங்கள் நகரபிதாவினால் முன்மொழியப்பட்டு அதற்கான ஆதரவுகளை அதிகாரிகள் வழங்குவதாகவும் இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(க-100)

# நினைவேந்தலை வடமாகாண சபை நடத்துவது அரசியற் பொருத்தமற்றது

## யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் சாடல்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை வடக்கு மாகாண சபை நடத்துவது என்பது அரசியற்பொருத்தமற்ற செயல் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் சாடியுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு கடந்த மூன்று ஆண்டுகளாக வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில் மாகாணசபையால்முன்னெடுக்கப்பட்ட நிலையில் அதனை இம்முறை தம்மை நடத்த விடாமல் தடுத்தமையைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்றுக் காட்டமான அறிக்கை விடுத்துள்ளது.

வடக்கு மாகாண சபை ஒரணியில் திரள ஒவ்வொரு ஆண்டும் அழைப்புவிடுத்த போது, அரசியல் வேறுபாடுகளால் சிலதரப்புகள் ஒவ்வொன்றாகப் பிரிந்து நின்று நினைவேந்தல் நிகழ்வை நடத்தின.

இந்த நிலையில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பையடுத்து சில தரப்புகள் ஒன்றிணைந்த நினைவேந்தலுக்கு ஆதரவளிக்க முன்வந்தன. எனினும் வடக்கு மாகாண சபைதான் வழமை போன்று நினைவேந்தல் நிகழ்வை ஒழுங்கமைத்து நடத்துமென முதலமைச்சர் நேற்றுக் காலை அறிவித்தார்.

இந்த நிலையிலேயே யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று மாலை புதிய அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழர் இனவழிப்பு நினைவு நாளை முள்ளிவாய்க்கால் மண்ணில் ஒற்றுமையாக ஒரே நிகழ்வாக நடத்துவதற்குப் பல்கலைக்கழக மாணவர் சமூகமாகிய நாம் கடந்த பல வாரங்களாகக் கடும்முயற்சியை மேற்கொண்டு வந்திருந்தோம்.

கடந்த ஆண்டுகளில் இந்த நிகழ்வுகளைத் தனித்தியாக நடத்தியவர்களோடு உரையாடி ஒற்றுமையாக ஒரே நிகழ்வாக நடாத்துவதற்கான எமது முயற்சிகள் ஆங்காங்கே இடறுப்பட்டாலும் முன்னேற்றகரமாகவே அமைந்திருந்தன.

பல்வேறு அரசியல் செயற்பாட்டுக் குழுக்களும் அமைப்புக்களும் எமது இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்கியிருந்தன. கடந்த ஆண்டு நிகழ்வுகளை நடத்திய தரப்புக்கள்கூடத் தமது ஒத்துழைப்பு வழங்கியிருந்தன. ஆனால் இந்நிலையில் வெண்ணெய் திரண்டுவரும் போது தாழி உடைந்த கதையாகத் தற்போது வடமாகாண சபை தாமே இந்தநிகழ்வைநடத்துவோமென அறிவித்துள்ளது எமது மனவேதனையைத் தந்திருக்கிறது.

வடமாகாண சபை இந்த நிகழ்வை நடத்துவதானது மீளவும் கடந்த ஆண்டுகளைப்போல் நிகழ்வுகள் பிரிந்து நடத்தப்படும் நிலைக்கே இட்டுச் செல்லும் என்பதை நாம் மனவேதனையுடன் சுட்டிக்காட்டுகின்றோம்.

முள்ளிவாய்க்காலில் இடம்பெறும் நிகழ்வானது தனியே முள்ளிவாய்க்கால் மண்ணில் மடிந்த மக்களுக்கான அஞ்சலி நிகழ்வோ அல்லது மே-18 என்பது தனியே அன்று மடிந்த மக்களை மட்டும் நினைவுகொள்ளும் நாளோ அன்று.

மாறாகத் தமிழினம் எதிர்கொண்ட இனவழிப்பை ஒட்டுமொத்தமாகச் சுட்டிநிற்கும் நாள்தான் மே – 18. இந்நாள் வடக்கு மாகாணத்துக்கு மட்டும் உரியதன்று. முள்ளிவாய்க்கால் நிகழ்வும் வடக்கு மாகாணத்துக்கு மட்டும் உரித்தானதன்று.

எனவே இந்த நிகழ்வை வடமாகாண சபைதான் நடத்துவதென்பது அரசியற்பொருத்தமற்ற செயல். அத்தோடு சர்ச்சைக்குரிய அந்த அரசியல் அதிகாரக் கட்டமைப்பு தமிழர்களைத் தலைமைதாங்கும் கட்டமைப்பாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படவுமில்லை.

இந்நிலையில் தாமே தமிழர்களை ஒருங்கிணைக்கும் அதிகாரக் கட்டமைப்பு என்ற தொனியில், தமக்கே இந்த நிகழ்வை நடத்த உரித்துண்டு என்று வடமாகாண சபை உறுப்பினர்கள் நினைப்பது பொருத்தமற்றது.

ஏற்கனவே எமது கடந்த அறிக்கையில் குறிப்பிட்டதைப் போல், இந்நிகழ்வானது ஒற்றுமையென்ற பேரில் தகாதவர்களையும் கூட்டி கூத்தடிக்கும் வகையில் அமையக்கூடாதென்பது மக்களின் அவாவாகும்.

வடமாகாண சபையானது இந்த அவாவை நிறைவு செய்யக்கூடிய தகுதியுள்ளதா? என்ற கேள்வியை அவர்களே தமது மனச்சாட்சியைக் கேட்டுக் கொள்ளட்டும்.

மேலும், வடமாகாண சபையானது தேர்தல்வழி அமைக்கப்படும் ஒரு கட்டமைப்பாகும். அது காலப்போக்கில் யார்யார் கையிலாவது போய்ச்சேரும். இன்றிருக்கும் முதல்வர், இனவழிப்பு தொடர்பிலும் தமிழரின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பிலும் சரியான நோக்குடன் செயற்படுகிறார் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

ஆனால் தொடர்ந்து வரப்போகும் முதல்வர்களும் ஆளுங்கட்சியும், உறுப்பினர்களும் எவ்வாறு அமைவார்களென்பது உறுதிபடச் சொல்லமுடியாது. இனவழிப்புக்குத் துணைபோனவர்களே கூட மாகாணசபை நிர்வாகத்தில் கோலோச்சக்கூடும்.

இந்நிலையில் வடமாகாண சபைதான் மே – 18 நிகழ்வை முள்ளிவாய்க்காலில் செய்யும் என்ற நிலைப்பாட்டை உறுதியாக்கினால் காலப்போக்கில் இந்நிகழ்வே கேலிக்குரியதும் கேள்விக்குரியதும் ஆகிவிடுமென்ற கரிசனை எமக்குண்டு.

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு, தாங்கள் முதல்வராக இருக்கும்போதே இந்நிகழ்வை ஒரு பொதுமக்கள் நிகழ்வாக மாற்ற வழிசமையுங்கள் என்று நாம் முதல்வரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

எனினும் வடமாகாண சபையின் தன்னிச்சையான போக்கும் தமது தனிப்பட்ட அரசியல் நலன்கள் அடிப்படையில் சிலர் சிந்தித்ததின் விளைவும் முள்ளிவாய்க்கால் மண்ணில் நிகழ இருந்த ஒன்றுபட்ட எழுச்சி நிகழ்வைக் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது.

பல்கலைக்கழக மாணவர் சமூகம் முன்னெடுத்த இந்த முயற்சிக்கு ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் பல்வேறு வழிகளில் தமது ஆதரவை வழங்கியிருந்த நிலையில் வடமாகாண சபையின் தான்தோன்றித்தனமான இந்த முடிவு எமக்கு மிகுந்த வேதனையை அளிக் கிறது. இயன்றவரை முயன்றும் அவர்களின் விடாப்பிடியான முடிவால் எமது முயற்சிகள் முழுமை பெறாமல் முடக்கப்பட்டுள்ளதை எமது மக்களுக்கு மிகுந்த மனவருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓர் இனத்தின் ஆன்மாவே அவதிக்குள்ளாகித் தவிப்பதை நினைவுகொள்ளும் நாளை – உலகின் மனச்சாட்சியை எம் ஒன்றுபட்ட குரல்களால் உலுப்பும் நாளை எமதினம் எதிர்கொண்ட ஒட்டுமொத்தத் துன்பத்தையும் நினைந்துருகிக் கரையும் நாளை – தமது அரசியல் சுயலாபங்களுக்காக பந்தாட நினைக்கும் அரசியலாளர்கள் மக்களுக்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

எமது ஒற்றுமை முயற்சியின் பலனாக ஏற்கனவே எழுச்சியுற்றிருக்கும் மாணவர் சமூகம், மக்கள் கூட்டம், செயற்பாட்டியக்கங்களின் கோபக்குமுறலுக்கான பதிலை அவர்களே தயார்செய்ய வேண்டும்.

முள்ளிவாய்க்கால் நிகழ்வுக்கென அனைத்து மாவட்டங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கானவர்கள் பயணம் மேற்கொள்ளவிருந்த சூழ்நிலையிலும், பல்வேறு மக்கள் அமைப்புக்கள் எமது முயற்சிக்கு ஆதரவு தந்து பெரும் மக்கள் அலை திரண்டுவந்து நிகழ்ந்திருக்கக் கூடிய இந்த நிகழ்வை, கடந்த ஆண்டுகளைப்போல் சிதைந்து போக வைத்த பெருமை வடமாகாணசபையினரையே சாரும் – என்றுள்ளது. (ஐ-7)

### ஆவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளையார் கோவில் பகுதியில் வைத்து நேற்று மாலை இந்த வாள்வெட்டு நடந்துள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த இருவர் மீதே வாள்வெட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆவா குழுவின் தலைவர் என்றுஅழைக்கப்படும்வினோத் மற்றும் அவரது நண்பர்கள் 7 பேர் 4 மோட்டார் சைக்கிள்களில் சென்று இந்த வாள்வெட்டை மேற்கொண்டனர் எனக் கூறப்படுகிறது.

வாள்வெட்டுக்கு இலக்கான நபர் ஆவா குழுவைச் சேர்ந்த ஒருவரைத்தகாத வார்த்தையால் பேசினார் எனவும், அந்த கோபத்தினால், ஆவா குழுவின் தலைவர் உட்பட 8 பேர் இந்தத் தாக்குதலை நடத்தினர் எனவும் கூறப்பட்டது.

வாள்வெட்டுக்கு இலக்கான மற்றைய நபர் கோவில் பகுதியில் மாடு மேய்க்கச் சென்றவர் என்று தெரியவந்தது.

இந்த வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைக் கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ -7)

# கூட்டமைப்பு எம்.பிக்கள் குழு நேற்று கொழும்பில் கூடியது

கொழும்பு,மே 08

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு அதன் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நேற்றுக் கொழும்பில் கூடியது.

இதன்போது நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ள ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பிலும், அதன் பின்னர் இடம்பெறவுள்ள வாக்கெடுப்புத் தொடர்பிலும் ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது.

அத்துடன் 20 ஆவது திருத்தச் சட்டம் குறித்தும் நேற்றைய கூட்டத்தில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இவை குறித்து முடிவுகள் எட்டப்படாத நிலையில், கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு நாளை புதன்கிழமை மீண்டும் கூடவுள்ளது. (ஐ)

### 2020...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் மே தின நிகழ்வு, கட்சியின் தலைவரும், ஜனாதிபதியுமான, மைத்திரிபால சிறிசேன தலைமையில் மட்டக்களப்பு, செங்கலடி – மாவடிவேம்பில் நடைபெற்றது.

'தேசிய ஐக்கியத்திற்கு தொழிலாளரின் சக்தி, எனும் தொனிபொருளில் நடைபெறும் இந்த மே தினக் கூட்டத்தில் சிறப்புரை ஆற்றிய ஜனாதிபதி, சிலர் தம்மிடம் 2020இல் ஓய்வுபெறப் போகிறீர்களா? எனக் கேட்கின்றனர். சில ஊடகங்களும் 2020இல் நான் ஓய்வு பெறப்போவதாகச் செய்திகளை வெளியிட்டன.

எனினும் 2020இல் நான் ஓய்வுபெறப் போவது இல்லை. நாட்டுக்கு ஆற்றவேண்டிய பணிகள் இன்னமும் எஞ்சியிருக்கின்றன. – என்றார். (ஐ)

### இனி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரன், டக்ளஸ் தேவானந்தா என்று 'பிக் – ஷொட்' எல்லாம் முதல்வர் வேட்பாளராகக் களமிறங்கத் தயார்.

தாம் களமிறங்கி வென்றால், இலங்கையின் சிறந்த மாகாண முதல்வர் என்பதை நிரூபிப்பேன் என உறுதிபடக் கூறுகின்றார் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா.

ஆனாலும் நேரடியாக அவர் முதல்வர் வேட்பாளராகக் களமிறங்குவதிலும் ஒரு சிக்கல் உள்ளது.

இந்த வருட இறுதியில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடக்குமானால், அதற்குப் பின்னரும் தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் மேலும் ஒன்றரை ஆண்டுகள் தொடரும். இந்த மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதானால் தமது எம்.பி. பதவியை டக்ளஸ் தேவானந்தா இராஜினாமாச் செய்து விட்டு, இறங்கி வரவேண்டும். அப்படி அவர் தமது எம்.பி. பதவியை இராஜினாமாச் செய்தால், ஈ.பி.டிபியின் வேட்பாளர் பட்டியலில் விருப்பு வாக்கு வரிசையில் அடுத்து இருக்கும் சந்திரகுமார் எஞ்சிய காலத்துக்கு எம்.பியாகி விடுவார். ஆனால் சந்திரகுமாரோ ஈ.பி.டி.பி. தரப்பிலிருந்து வெளியேறி சுயாதீனமாகச் சமூக நீதிக்கான அமைப்பு ஒன்றை ஆரம்பித்து கிளிநொச்சியில் வெற்றிகரமாக அரசியல் செய்து வருகின்றார். தமது எம்.பி. பதவியைச் சந்திரகுமாருக்குத் தாரை வார்த்தால் தமது 'எதிரி' தரப்பில் இப்போது அரசியல் செய்யும் சந்திரகுமாருக்கு அது பெரு வாய்ப்பாகி விடும் என டக்ளஸ் தேவானந்தா யோசிக்கின்றார் என்று தெரிகின்றது.

அதனால் சந்திரகுமாரை ஈ.பி.டி.பி. கட்சியிலிருந்து சட்டரீதியாக – உத்தியோகபூர்வமாக – வெளியேற்றி, அதனைத் தேர்தல் ஆணையாளர் ஏற்கக் கூடிய விதத்தில் நடைமுறைப்படுத்தினால், தாம் இராஜினாமாச் செய்வதால் ஏற்படும் எம்.பி. பதவி சந்திரகுமாருக்குப் போகாமல் அவருக்கு அடுத்து விருப்பு வாக்குகளைப் பெற்ற தமது ஈ.பி.டி.பி. கட்சிக்காரர் ஒருவருக்குப் போகுமா என்பதைப் பரிசீலிக்க டக்ளஸ் தேவானந்தா விரும்புகிறார்.

அது சரிவராவிட்டால், மாகாணசபை வேட்பாளர் பட்டியலில் தனது பெயரை அறிவிக்காமல் விட்டு விட்டு, தேர்தல் முடிவின் பின்னர் எல்லா வேட்பாளர்களையும் கூண்டோடு இராஜினாமாச் செய்ய வைத்து விட்டு, போனஸ் ஆசனம் கிடைத்தால் அதற்கோ, அல்லது தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர் ஒருவரின் இடத்துக்கோ தமது பெயரைச் சேர்த்துத் தாம் மாகாண சபை உறுப்பினராகி, அதன் மூலம் முதல்வராகத் தெரிவு செய்யப்படும் தகுதியைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் டக்ளஸ் கருதுகின்றாராம். அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

டக்ளஸ் தேவானந்தா வடக்கு மாகாண முதலமைச்சரானால் வடக்குத் தமிழருக்காக அவர் ஆற்றும் கைங்கரியங்களைத் தென்னிலங்கை அரசோ, மக்களோ சந்தேகக் கண் கொண்டு பார்க்காமல் முழு ஒத்துழைப்பு வழங்கு வார்கள் என்றும் ஈ.பி.டி.பியின் வட்டாரங்கள் கூறுகின்றன.

வடக்கு மக்களுக்காகத் துணிச்சலோடு குரல் கொடுக்கும் அதே சமயம் தெற்கினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவராகவும் சிறந்த நிர்வாகியாகவும் செயல்படக் கூடியவரே இன்று வடக்கு முதல்வர் பதவிக்கு வரவேண்டும் எனக் கூறும் அந்த வட்டாரங்கள் அந்த முழுத் தகுதியும் டக்ளஸுக்கே உண்டு என்றும் அடித்துக் கூறுகின்றன.

வடக்கு புனர்வாழ்வு அமைச்சராக இருந்து, யுத்தத்துக்கு மத்தியிலும் சிறப்பாக அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துத் தமது தகுதியை நிரூபித்தவர் டக்ளஸ் தேவானந்தா என்றும் அவரது கட்சி வட்டாரங்கள் வெளிப்படுத்துகின்றன.

எது, எப்படியோ... ஒன்று மட்டும் நிச்சயம்.

அது – வடக்கு மாகாண முதல்வர் பதவிக்கு 'சபாஷ்... சரியான போட்டி...' – என்பது தான்!

-மின்னல்-

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு: ஆழ ஆராய்ந்து முடிவெடுங்கள்!

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பதற்கு வழி செய்யும் விதத்தில், தனிநபர் பிரேரணை ஒன்றை அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தமாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருகின்றது ஜே.வி.பி.

அந்த முயற்சிக்கு எதிராக ஏற்கனவே தென்னிலங்கையில் எதிர்ப்புக் கிளம்பியிருக்கின்றது.

'செல்லும் செல்லாததற்கெல்லாம் செட்டியார் மீது பழியைப் போடுதல்'– என்று ஒரு பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு. அதேபோன்று தென்னிலங்கையில் அரசியல் சர்ச்சைகள் முற்றும்போது விடயத்தை இனவாதமாக்கும் பண்பியல்பு அங்கு உண்டு. விவகாரத்தை இனவாதமாக்கி, அதன் மூலம் லாபமடையும் நடைமுறை தென்னிலங்கைப் பேரினவாதத்தின் ஒரு பரவணிப் பழக்கம் தான்.

அதே பாணியை இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்புத் தொடர்பான ஜே.வி.பியின் பிரேரணையை ஒட்டியும் முன்வைக்கின்றன சில பேரினவாத சக்திகள். இந்தப் பிரேரணைப்படி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்பட்டால், அதனால் பௌத்தத்துக்கும் சிங்களத்துக்கும் பேராபத்து நேர்ந்து விடும் எனக் கூக்குரலிடும் அத்தரப்புகள், நிறைவேற்று அதிகாரம் ஓரிடத்தில் – ஒருவரிடத்தில் குவிந்திருந்தமையால்தான் – விடுதலைப் புலிகளையும், பிரபாகரனையும் அழிக்க முடிந்தது என்று காரணம் கூறுகின்றன. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பதாயின், அதற்காக மக்களிடம் ஆணை பெறப்பட வேண்டும் என்று அவை வலியுறுத்துகின்றன.

மேற்படி தனிநபர் பிரேரணையை முன்வைக்கும் ஜே.வி.பியின் சார்பில் அதன் பிரசாரச் செயலாளரான விஜித ஹேரத் மேற்படி விவகாரத்துக்கு நல்ல பதில் தந்திருக்கின்றார்.

*"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை–சர்வாதிகாரமும் ஓரிடத்தில் குவிந்திருக்கும் அதிகார முறைமையை– ஒழிப்பதற்குப் புதிதாக மக்கள் ஆணை பெற வேண்டும் என்பது கேலிக் கூத்துக் கோரிக்கை. கடந்த ஐந்து ஜனாதிபதித் தேர்தல்களிலும் தொடர்ச்சியாக மக்கள் அதற்கே ஆணை வழங்கி வந்துள்ளனர். 1994, 1999, 2005, 2010, 2015 ஆகிய ஐந்து ஜனாதிபதித் தேர்தல்களிலும் வெற்றி பெற்றவர்கள் இந்த வாக்குறுதியை மக்களுக்குப் பகிரங்கமாக வழங்கித் தான் மக்கள் ஆணையைப் பெற்றனர். இந்தத் தேர்தல்களில் எல்லாம் வெற்றி பெற்றவர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களை ஒரு தடவை வாசித்துப் பாருங்கள். இந்த விடயம் தெளிவாகவும், திட்டவட்டமாகவும், துலாம்பரமாகவும் அந்த விஞ்ஞாபனங்களில் பொதிக்கப்பட்டு உள்ளன. பிறகும் – இனியும் – இதற்குத் தனியான மக்கள் ஆணை வேண்டும் என்று கோருவது வேடிக்கையானது."*– என்ற சாரப்பட விளக்கமளித்திருக்கின்றார் விஜித ஹேரத்.

ஆக, தேசிய மட்டத்தில் பல தடவைகள் மக்கள் ஆணை பெறப்பட்ட விடயம் ஒன்றைச் செயற்படுத்தாமல், தடுப்பதற்காக இனவாதத்தை இழுக்கின்றது தென்னிலங்கை பௌத்த, சிங்கள இனவாதம்.

சரி, இத்தகைய அரசமைப்புத் திருத்தத்துக்கான – நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறைமையை ஒழிப்பதற்கான– பிரேரணை நாடாளுமன்றுக்கு வந்தால் தமிழர் தரப்பு அதற்கு எத்தகைய எதிர்வினையைக் காட்ட வேண்டும்? இன்றைய அரசியல் சூழ்நிலையில் விரிவாக ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டிய விடயம் இது.

"நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய அரசமைப்பு மாற்றத்தையே எதிர்பார்த்திருந்தோம். அதைத் தவிர்த்து தனியாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையையோ – அல்லது தனித்து தேர்தல் சீர்த்திருத்தங்களையோ – மட்டும் கொண்டதாக வரும் அரசமைப்பு மாற்றத்துக்கு இணங்கோம்."– என்ற சாரப்பட ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தரப்பில் இருந்து எதிர்வினை வந்துள்ளது.

நாடாளுமன்றத்தில் 16 எம்.பிக்களைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு, நாடாளுமன்றில் கொண்டுவரப்படக் கூடிய எந்த அரசமைப்புத் திருத்தத்துக்கும் குறைந்த பட்சம் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவு அவசியம் என்ற கட்டாய விதி காரணமாக அவற்றில் கணிசமான ஆதிக்கம் செலுத்தக் கூடிய வாய்ப்பு உண்டு. அந்த வகையில் இந்த விடயத்திலும் அதன் செல்வாக்கு குறைத்து மதிப்பிடக் கூடியதல்ல.


அந்த வலிமையை – செல்வாக்கை – பிரயோகிப்பது தொடர்பில் முடிவெடுக்கும் போது தமிழர் தரப்பு மிகப் பொறுப்புணர்வுடனும் தீர்க்கதரிசனத்துடனும் நடந்து கொள்ள வேண்டியமை அவசியமாகும்.

இந்த நாட்டில் தேசிய இனப்பிரச்சினையால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் வடக்கு, கிழக்குத் தமிழர்கள். ஆனால் அவர்கள் மட்டும் பாதிக்கப்பட்டவர்கள் அல்லர். வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் என அனைத்து சிறு பான்மையினருமே அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற சர்வ வலிமை படைத்த அதிகாரப் பதவிக்கு ஒருவரைத் தேர்ந்தெடுப்பதில் கணிசமான செல்வாக்கும், ஆதிக்கமும் செலுத்தக் கூடிய வலிமை சிறுபான்மையினர் கைகளிலும் தங்கியிருக்கும் இன்றைய அரசியல் சூழ்நிலையில், அந்த ஆட்சி முறைமையை ஒழிப்பதற்கான விடயத்தில் தமிழர் தரப்பு தனித்து – தனது நலன் கருதி மட்டும் – முடிவை எடுக்கக் கூடாது. ஏனைய சிறுபான்மைத் தரப்புகளுடனும் கலந்துரையாடி, அத்தரப்புகளின் நலனையும் கவனத்திலும் கரிசனையிலும் எடுத்துத்தான் ஒரு தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும். அதுவே நியாயமானதாகும்.

# ஊழல், மோசடிகளை அம்பலப்படுத்தும் பொறுப்பில் ஊடகர்களுக்கும் பங்குண்டு

### அமைச்சர் ஹக்கீம் சுட்டுக்காட்டு



கொழும்பு, மே 08

ஊழல், மோசடிகளில் ஈடுபடுபவர்களை வெளியே கொண்டு வருவதற்குரிய பொறுப்பில் ஒரு பங்கு ஊடகவியாளர்களுக்கு இருக்கின்றது. இந்த மோசடிகளில் அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்டிருந்தாலும் வெளிக்கொணர்ந்து காட்டலாம்.

– இவ்வாறு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அமைச்சரின் தலைமையில் கழிவு நீர் விநியோகத் திட்டம் சம்பந்தாக ஊடகவியலாளர் மாநாடும், திட்டங்களைப் பார்வையிடும் நிகழ்வும் குருநாகல் கழிவு நீர் செயற்திட்டக் காரியாலயத்தில் நடைபெற்றது.

இத்திட்டம் சம்பந்தமாக அமைச்சர் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கமளிக்கும்போது ஊடகவியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்–

ஜனாதிபதி செயலகத்தில் ஊழல், மோசடி இடம்பெற்றாலும் சுயாதீனமான சட்டம், ஒழுங்கு பேணப்படுகின்றது. சுயாதீனமாக முன்னெடுத்துச் செல்லப்படும் ஒழுங்கு முறைகள் நல்லாட்சி அரசில் ஒப்புவிக்கப்பட்டுள்ளன. யாராக இருந்தாலும் இவ்வாறான குற்றச்சாட்டு வரும் போது விசாரணை மேற்கொள்வதற்கோ, விமர்சனம் செய்வதற்கோ எந்தத் தடையும் இல்லை.

ஊழல், மோசடிகளில் ஈடுபடுபவர்களை வெளியே கொண்டு வருவதற்குரிய பொறுப்பில் ஒரு பங்கு ஊடகவியாளர்களுக்கு இருக்கின்றது. இந்த மோசடிகளில் அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்டிருந்தாலும் வெளிக்கொணர்ந்து காட்டலாம். மத்திய வங்கி பிணைமுறி விவகாரங்கள் கூட ஊடகங்கள் மூலமாகத்தான் ஜனாதிபதிக்கு முன் வைக்கப்பட்டு அதனை விமர்சனம் செய்து தேவையான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அந்தவகையில்தான் ஊழல், மோசடி ஆணைக்குழு எந்த அரசியல்வாதிகளும் சரி, வேறு எவராக இருந்தாலும் சரி கை போட முடியாதளவுக்குச் சுதந்திரமாகச் செயற்படுமளவுக்கு உரியசட்டதிட்டங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.– என்றார்.

இந்நிகழ்வில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் கே.ஏ. அன்ஸார், பொது முகாமையாளர் தீப்தி சுமனசேகர, அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் எம். நயீமுல்லாஹ், செயற்திட்ட முகாமையாளர் டி.வி. மெதவத்த, உயரதிகாரிகள் மற்றும் ஊடகவியளாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# வறட்சியின் காரணமாக வாழ்வாதாரம் பாதிப்பு

### கிளாலி மீனவர்கள் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 08

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழையின்மையால் கிளாலி மீனவர்களின் வாழ்வாதரம் பாதிக்கப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் கிளாலிக் கிராம மக்கள் கடற்தொழிலை நம்பித் தமது வாழ்க்கையைக் கொண்டு செல்கின்றனர். அதிலும் குறிப்பாக இறால் தொழிலே முதன்மையானது. இதை நம்பி இருநூறுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன .மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கும் வறட்சியால் இவர்களுக்குஇறால்தொழில் கைகொடுக்கவில்லை என அப்பகுதி மீனவர்கள் பச்சிலைப்பள்ளிப்பிரதேசசபைத் தவிசாளர் சுரேனிடம் தெரிவித்தனர்.



இதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுத்து வறட்சி நிவாரணம் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரினர். (ஐ)

# நாடாளுமன்றத்தின் ஆசனமுறை மாற்றம்

நாடாளுமன்ற ஆசனமுறைமையில் இன்று மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்துள்ளார். அரசிலிருந்து வெளியேறிய 16 முன்னாள் அமைச்சர்களும் நாடாளுமன்ற எதிர்க்கட்சிதரப்பில் அமரத் தமக்கு ஆசனங்களை ஒதுக்கித் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கமைய ஆசன மாற்றங்கள் இடம்பெறுவதாகவும், இந்த 16 பேரில் சிரேஸ்ட உறுப்பினர்களுக்கு எதிர்க் கட்சித் தரப்பின் முன்வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுமந்திரனின் பௌத்த விரோத அறிவிப்பு; ஜனாதிபதி, பிரதமர் பதிலளிக்க வேண்டும்

கொழும்பு, மே 08

வடக்கு–கிழக்குப் பகுதிகளில் விகாரை அமைப்பதைத் தடை செய்ய வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் நிலைப்பாட்டை நாட்டுக்கு வெளிப்படுத்தவேண்டும் எனத் தென்னிலங்கையின் பிரதான மகா சங்க தலைவர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரின் இந்த அறிவிப்பு, அரசியலமைப்புக்கு முரணானது மட்டுமல்லாது முறைகேடான ஒன்றாகவும் உள்ளது. இதனூடாக மத பேதம் ஏற்படுவதற்கு வழிவகுப்பதாகவும் தேரர் சுட்டிக்காட்டினார்.

இந்த அறிவிப்பைச் செய்த சுமந்திரனின் நாடாளுமன்ற உறுப்புரிமை பறிக்கப்படவேண்டும் என்பதோடு, அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவேண்டும் எனவும் தேரர் குறிப்பிட்டார்.

சுமந்திரன் எம்.பிக்கு பௌத்த விகாரைகள் அமைப்பது மாத்திரமா பிரச்சினைக்குரியது, வேறு சமயஸ்தலங்களை அமைப்பது அவருக்குப் பிரச்சினையில்லையா? எனவும் தேரர் கேள்வி எழுப்பினார்.

வடக்கு–கிழக்குப் பகுதிகள் எங்கும் பௌத்த தலங்கள் சிதறிக்கிடக்கின்ற நிலையில், சுமந்திரன் இதுபோன்ற அறிவிப்புக்களை விடுப்பது யாருடைய அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டு என்று கேட்கவேண்டியுள்ளது. இவரின் அறிவிப்பு உண்மையிலேயே கொடூரமான ஒன்று எனவும் தேரர் வர்ணித்தார். (ஐ)

### சோபித தேரர் கோரிக்கை

### நாளை

09.05.2018
புதன்கிழமை
நட்சத்திரம் : அவிட்டம் மு.ப. 8.05 வரை
திதி : நவமி மு.இ. 7.54 வரை
சுபநேரம் : 4.24 – 5.54 வரை
இராகுகாலம் : 11.54 – 1.24 வரை

# கடந்த 4 மாதங்களில் லஞ்சம் பெற்ற பதினொரு முக்கிய புள்ளிகள் கைது

## லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தகவல்

கொழும்பு, மே 08

இந்த வருடத்தின் கடந்த 4 மாத காலப்பகுதிக்குள் லஞ்சம் பெற்ற அரச அதிகாரிகள் 11 பேரை கைது செய்ய முடிந்துள்ளது என லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளர் நெவில் குருகே தெரிவித்துள்ளார்.

இந்த 11 பேரில் ஜனாதிபதி செயலக பிரதானியும், அரச மரக் கூட்டுத்தாபன தலைவரும் அடங்குகிறார் எனவும் அவர் கூறியுள்ளார்.

இவர்கள் தவிர, கைது செய்யப்பட்டவர்களில் பொலிஸ் அதிகாரிகள் ஐவர் காணப்படுகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.




இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது சுற்றிவளைப்புப் பிரிவு அதிகாரிகளுக்குத் தொடர்ந்தும் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுக்கு ஏற்ப சுற்றிவளைப்புக்களை மேற்கொள்கின்றோம். லஞ்சம் தொடர்பிலான முறைப்பாடுகள் ஒவ்வொரு நாளும் குவிந்த வண்ணமுள்ளன. கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரணை செய்தே நாம் சுற்றிவளைப்புக்களை மேற்கொள்கின்றோம்.

லஞ்சம் ஊழல் தொடர்பிலான முறைப்பாடுகள் இருப்பின் 1954 எனும் இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறும் ஆணையாளர் நெவில் குருகே அறிவித்துள்ளார்.

(க)

# ஜேம்ஸ் பீரிஸின் விருது திருட்டு; சந்தேகநபர்கள் ஐவர் கைது!

கொழும்பு, மே 08

காலஞ்சென்ற பிரபல சிங்கள மொழி திரைப்பட இயக்குநர் கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் விருதை திருடியமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஐவர் பம்பலப்பிட்டி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காலஞ்சென்ற லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் இறுதிக்கிரியைகள் இடம்பெற்றவேளை, கடந்த 2 ஆம் திகதி அவருடைய வீட்டிலிருந்து கோல்டன் பீகொக் வாழ்நாள் சாதனையாளர் விருது திருடப்பட்டமை தெரியவந்தது.

இந்நிலையில் குறித்த விருது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது கடந்த 5 ஆம் திகதி கடுவல - கொள்ளுப்பிட்டி வழித்தடத்தில் பயணிக்கும் 177 ஆம் இலக்க பஸ்ஸில் இருந்து திருடப்பட்ட விருது மீட்கப்பட்டது.

இந்த நிலையிலேயே விருது திருடப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவந்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஐவரைக் கைது செய்துள்ளனர்.

இந்த கோல்டன் பீகொக் விருதானது (Golden Peacock Award ) கடந்த 1965 ஆம் ஆண்டு புதுடெல்லியில் இடம்பெற்ற இந்திய திரைப்பட விருது வழங்கும் நிகழ்வில் 'கம்பெரலிய' என்ற திரைப்படத்துக்காக லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெங்காய உற்பத்தித் துறையில் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி



அனுராதபுரம் மாவட்டத்தில் கலன்பிந்துனுவெவ, கல்நேவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 3 விவசாயிகளுக்கு வெங்காய உற்பத்தித்துறையில் தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சியை இலங்கையில் செயற்பட்டு வரும் சர்வதேச விவசாயிகள் தொடர்பான கொரிய நாட்டு நிறுவனமான 'கோபியா' என்ற அமைப்பு வழங்கியுள்ளது.

கொரிய நாட்டு தொழில்நுட்ப முறைகளை உள்ளூர் வெங்காய உற்பத்தியாளர்களிடையே அறிமுகம் செய்து, உள்ளூர் வெங்காய உற்பத்தியை அதிகரிப்பது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்தக் கிராம மக்களுக்குத் தங்களது பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய வசதிகளை இந்த நிறுவனம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என நிறுவனத்தின் தலைவர் கலாநிதி சொய்யும் லீக் தெரிவித்துள்ளார்.

# தெற்காசிய மெய்வன்மை; இலங்கைக்கு 2 ஆம் இடம்!

கொழும்பு, மே 08

தெற்காசிய மெய்வன்மை விளையாட்டுப் போட்டியில் இந்தியா முதலிடத்தைப் பெற்றுள்ளது.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் இரு தினங்கள் நடைபெற்ற இந்தப் போட்டியில் இதுவரையில் 20 தங்கப் பதக்கங்களுடன் மொத்தமாக 50 பதக்கங்களைப்பெற்றுள்ளது.

இலங்கை 12 தங்கம், 10



வெள்ளி, 19 வெண்கலப் பதக்கங்களை பெற்று 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காலியில் தொழிற்சாலை அபிவிருத்தி; இத்திட்டத்திற்கு ரூ.6 லட்சம் ஒதுக்கீடு

காலி - கடவத்சதர பிரதேசத்தில் தொழிற்சாலை அபிவிருத்தித் திட்டத்துக்காக 60 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது எனக் காலி சிறிய வர்த்தக அபிவிருத்திப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன் கீழ் கிராம மட்டத்தில் சிறிய அளவிலான உற்பத்திகள் பலவும் சந்தைப்படுத்தப்பட உள்ளன.

அரிசிமா தயாரிப்பு, பேக்கரி தயாரிப்பு, பழவகை உற்பத்தி ஆகியன இதில் இடம்பெற்றுள்ளன.

இதன் மூலம் சுமார் 200 குடும்பங்



கள் நன்மையடையும் என்று காலி சிறிய வர்த்தக அபிவிருத்திப் பிரிவு தெரிவித்துள்ளது.

(க)

# தேசிய மரநடுகை மாதம் தொடர்பில் வடக்கு ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்

கொழும்பு, மே 08

தேசிய மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு யாழ். நகரை பசுமைப்படுத்துவதற்கான திட்டங்கள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தலைமையில் நடைபெற்றது.

எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி தேசிய மரம் நடுகை மாதமாகும். அன்றைய தினத்தில் பொருத்தமான இடங்களில் பொருத்தமான மரங்களை நடுவதற்குரிய ஏற்பாடுகளை செய்வதற்காக இந்தக் கூட்டம் கடந்த சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

யாழ். நகரபிதா ஆனோல்ட், விவ



சாய அமைச்சர் சிவநேசன் ஆகியோருடன் இணைந்து ஆளுநர் செயலகம் உட்பட அனைத்து திணைக்களங்களின் பங்களிப்புடன் யாழ் நகரை பசுமைப்படுத்தும் பணி ஆரம்பிக்கப்படும் என வடமாகாண ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சர் சிவநேசன், யாழ் மாநகர நகரபிதா இம்மானுவேல் ஆனோல்ட், மாகாணசபை உறுப்பினர் அகிலதாஸ் சிவக்கொழுந்து உட்பட விவசாய திணைக்கள அதிகாரிகள், வனவளத் திணைக்கள அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் முப்படைகளையும் சேர்ந்த அதிகாரிகள் சாரணர்கள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

(க)

# சர்வதேச இறப்பர் மாநாடு நேற்று கொழும்பில் ஆரம்பம்

கொழும்பு, மே 08

சர்வதேச இறப்பர் மாநாடு நேற்று ஆரம்பமானது. இந்த மாநாடு இன்றும் கொழும்பில் நடைபெறவுள்ளது.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் நவீன் திசாநாயக்கவின் வழிகாட்டல் மற்றும் அமைச்சரின் தலைமையில் கீழ் இந்த மாநாடு நடைபெறுகிறது.

மாநாட்டில் 36 நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

உலகின் இறப்பர் துறையில் இறப்பர் கேந்திர நிலையமாக இலங்கை எதிர்காலத்தில் திகழும் என்பதனால் இந்த மாநாடு சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

பெருந்தோட்டத்துறை அமைச்சின் ஆலோசகர் லக்ன பரணவிதான சர்வதேச இறப்பர் ஆய்வு மாநாடு தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்த மாநாடு இலங்கைக்கு மிகவும் முக்கியமானதாகும். நாட்டில் இறப்பர் உற்பத்தியைப் போன்று, பெரிய அளவில் இறப்பரை செய்வோருக்கும் இது சிறந்த சந்தர்ப்பமாக அமையும் என்று ஆலோசகர் லக்ன பரணவிதான குறிப்பிட்டார்.

இறப்பருக்கு சிறந்த விலையைப் போன்று சிறந்த வர்த்தக சந்தையையும் அடையாளம் காண்பதற்கு இந்த மாநாட்டின் மூலம் சந்தர்ப்பம் கிடைப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிலையான அபிவிருத்திக்கான தடைகளை வெற்றி கொள்வதே இதன் தொனிப் பொருளாகும்.

இவ்வாறான ஒரு மாநாட்டை இலங்கையில் நடத்துவது மிகவும் விசேடமாகும். இதில் உலகில் இறப்பர்தயாரிப்பாளர்கள், இறப்பர் உற்பத்தியாளர்களைக் கொண்ட நாடுகளின் அரச நிறுவனங்கள், பிரதிநிதிகள், இறப்பரை விநியோகிப்போர், நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த 400 பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர் என பெருந்தோட்டத்துறை ஆலோசகர் லக்ன பரணவிதான. கூறியுள்ளார்.

## தினசரி ராசி பலன் (08.05.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் சித்திரைத்திங்கள் 25 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை அஷ்டமிதித்தி இரவு 8.43 மணி வரை பின்னர் நவமி. நட்சத்திரம்: திருவோணம் காலை 7.38 மணி வரை பின்னர் அவிட்டம். சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - மாலை 3.14 மணி முதல் 4.47மணி வரை.

**சுபநேரம்** - பகல் 10.22 மணி முதல் 11.52 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - சித்திரை மாத தேய்பிறை அஷ்டமி .

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - அவிட்டம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** - சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகளால் கடன்பட நேரும். தேக சுகம் பாதிப்படையும். வியாபாரத்தில் சுமாரான முன்னேற்றம் காணப்படும்.

**ரிஷபம்** - இன்பமான நாள். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் காணப்படும். ஆடை, அணி மணிகள் சேரும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். கோபமாய்ப் பிரிந்த உறவுகள் வலிய வந்து சேர்வார்கள்.

**மிதுனம்** - கவலையான நாள். பண முடை ஏற்படும். குடும்பத்தில் வீண் தகராறுகள் உண்டாகும். உறவினர்களால் தொல்லைகள் உண்டாகும். கடன் வாங்கியவர்கள் பணத்தை திரும்பத் தராமல் ஏமாற்றுவார்கள்.

**கடகம்** - மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வரவும் செலவும் சரிசமமாக இருக்கும். உடல் நிலையில் ரோகங்கள் உண்டாகும். குடும்பத்தில் சுமாரான அமைதி காணப்படும். வியாபாரம் லாபமும் நட்டமுமாக நடக்கும்.

**சிம்மம்** - உயர்வான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை, மகிழ்ச்சி உண்டாகும். தொழிலில் உயர்வுகள் கிடைக்கும். ஆடை, ஆபரணங்கள் சேரும்.

**கன்னி** - ஆக்கபூர்வமான நாள். வருமானம் வளமாக இருக்கும். உடலாரோக்கியம் சிறப்படையும். குடும்பத்தில் புரிந்துணர்வு அதிகரிக்கும். வியாபாரம் ஆக்கபூர்வ முன்னேற்றம் அடையும்.

**துலாம்** - யோசனையான நாள். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் சலசலப்புக் காணப்படும். சுயதொழிலில் ஆதாயம் குறையும். தாய், தந்தையரைப் பற்றிய கவலை மனதை வாட்டும்.

**விருச்சிகம்** - சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சமமாக இருக்கும். அளவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். வியாபாரத்தில் பொருள்கள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கும்.

**தனுசு** - நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். உத்தியோகத்தர்கள் விரும்பியபடி உயர்வுகள் கிடைக்கும். திருமணப் பேச்சு வார்த்தைகள் நல்ல முடிவைத் தரும்.

**மகரம்** - மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். தொழிலில் மேன்மை உண்டாகும். மாணவர்கள் கல்வியில் உயர்வடைவார்கள். சகோதர உறவு பலப்படும்.

**கும்பம்** - துயரமான நாள். வருமானம் குறைவாக இருக்கும். குடும்பச் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் கடன் பட நேரும். குடும்பத்தில் வீண் சண்டைகள் சச்சரவுகள் உண்டாகும். வியாபாரம் மந்த நிலையில் நடக்கும்.

**மீனம்** - அதிர்ஷ்டமான நாள். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். பூர்வீகச் சொத்துக்கள் தடையின்றி கைக்கு வரும். சிலருக்கு தொழில் கிடைத்து வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.

சந்திராஷ்டம நாள்: மிருகசீரிடம் 3ஆம், 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

# இலவச கண் வில்லைகளை வழங்கும் வேலைத் திட்டம்!

கொழும்பு, மே 08

இலவச கண்வில்லையை வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் நாட்டில் வருடந்தோறும் கண் பார்வையற்றோரின் எண்ணிக்கை 12 லட்சமாக இருந்தது என சுகாதாரம் போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

சுகாதார பணியாளர் சபையின் ஆகக்கூடிய சேவையின் மூலம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் கண்வில்லை சத்திரசகிச்சை நோயாளர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனால், அலுவலக நேரத்திற்குப் பின்னர், விசேட சேவையை பெற்றுக் கொள்வதற்கு வைத்தியர்களுடன் கலந்துரையாடப்பட்டிருக்கிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

2017 ஆம் ஆண்டில் மாத்திரம் 10 ஆயிரத்து 661 கண்வில்லைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இதற்காக 86 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

ஒலிபரப்புக் கூட்டுத் தாபன 'சுபாரதி' நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போது அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கொழும்பு தேசிய கண் வைத்தியசாலைப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் லயனல் முஹந்திரம் கருத்து வெளியிடுகையில்-

கண் வைத்தியசாலைக்காக 12 மாடிகளைக் கொண்ட புதிய கட்டடம் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இதற்காக, 3300 மில்லியன் ரூபா நிதியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. நாளாந்தம் சுமார் 2 ஆயிரம் நோயாளர்கள் கண் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருகை தருகின்றனர்.

தேசிய வைத்தியசாலைக்கு மேலதிகமாக ஏனைய வைத்தியசாலைகளின் கண் சத்திர சிகிச்சையை மேற் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று கொழும்பு தேசிய கண் வைத்தியசாலைப் பணிப் பாளர் நாயகம் டாக்டர் லயனல் முஹந்திரம் மேலும் தெரிவித்தார்.

# அரசின் அபிவிருத்தி திட்டங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி

கொழும்பு, மே 08

அரசால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதி உதவியினை தொடர்ந்தும் வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன் வந்துள்ளது.

குறிப்பாக எதிர்வரும் ஐந்து வருட காலங்களுக்கு நிதி உதவி வழங்கப்படும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் சபையின் உறுப்பினரும் நிறைவேற்று இயக்குநருமான இன்-சங் சொங் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பிலிப்பீன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் 51 ஆவது வருட கூட்டத்தில் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவை சந்தித்த போதே அவர் இந்த உறுதி மொழியை வழங்கினார்.

வழங்கப்படும் இந்த நிதியின் ஊடாக மேலதிக வேலை, மக்களின் வருமானம், கிராமிய பொருளாதார அபிவிருத்தி, அறிவினை விருத்தி செய்தல் போன்ற விடயங்களை மேம்படுத்துவதற்குச் செலவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# அம்பாறையில் காளான் உற்பத்தி



கொழும்பு, மே 09

அம்பாறை மாவட்டத்தில் காளான் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

உள்ளூர் சந்தைகளிலும், வெளிநாட்டுச் சந்தைகளிலும் காளான் உற்பத்திப் பொருள்களுக்கு சந்தை வாய்ப்பு அதிகரித்துள்ளது.

எனவே அம்பாறை மாவட்டத்தில் காளான் செய்கையை சிறு தொழிலாக செய்வோரை இனங்கண்டு அவர்களுக்கான ஊக்குவிப்புக்கள், தொழில் நுட்ப ஆலோசனைகளை விவசாயத் திணைக்களம் வழங்கவுள்ளது என மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

மஹாஓயா, தெஹியத்த கண்டிய ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் காளான் செய்கைக்கு ஏற்ற சூழ்நிலை காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிவேக பாதைகள் மூலமான வருமானம் சீனாவுக்குச் செல்கிறதா? அதில் உண்மையில்லை!

## மறுக்கிறார் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கபிர் ஹாஷிம்

கொழும்பு, மே 08

அதிவேக பாதைகள் மூலம் கிடைக்கும் வருமானம் சீனாவுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது என வெளியாகியுள்ள செய்தியில் எந்த உண்மையும் இல்லை என்று உயர் கல்வி நெடுஞ்சாலைகள் அமைச்சர் கபிர் ஹாஷிம் தெரிவித்துள்ளார்.

கடந்த புத்தாண்டு காலப் பகுதியில் அதிவேக பாதைகளில் குறிப்பிடத்தக்க வருமானம் பெறப் பட்டுள்ளது என்றும் அமைச்சர்



கபீர் ஹாஷிம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொதுவாக அதிவேக பாதைகள் மூலம் கிடைக்கும் அனைத்து வருமானங்களும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கிடைக்கப் பெறுகிறது.

இந்த வருமானம் சீனாவுக்கு எடுத்துச் செல்லப்படுவதாக வெளியாகும் செய்தியில் எதுவித உண்மையும் இல்லை.

அதிவேக பாதையை நிர்மாணிப் பதற்காக வெளிநாடுகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகை பொதுத் திறைசேரி மூலம்



செலுத்தப்படும் என்றும் அமைச்சர் கபீர் ஹாஷிம் மேலும் தெரிவித்துள்ளார்.

## 800 பேருக்கு இரட்டைப் பிரஜா உரிமை

கொழும்பு, மே 08

மேலும் 800 பேருக்கு இரட்டைப் பிரஜா உரிமை வழங்கப்படவுள்ளது.

இவை எதிர்வரும் 16 ஆம் திகதி வழங்கப்படவிருக்கின்றன என குடிவரவு, குடியல்வு கட்டுப்பாட்டாளர் எம்.என்.ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் சுமார் 30 ஆயிரம் பேருக்கு இரட்டைப் பிரஜா உரிமை வழங்கப்பட்டுள்ளது. மாதாந்தம் இதற்காக சுமார் ஆயிரம் பேர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கின்றனர்.

மேலும், 3 ஆயிரம் பேருக்கு இரட்டை பிரஜா உரிமை வழங்கப்பட இருக்கின்றது என்றும் குடிவரவு, குடியல்வு கட்டுப்பாட்டாளர் எம்.என். ரணசிங்க கூறியுள்ளார்.

## 69 ஆவது ஆண்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 08

அரியாலை சனசமூக நிலையத்தின் 69 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு எதிர்வரும் ஜூன் மாதம் 16, 17 ஆம் திகதிகளில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன என நிலையத்தின் தலைவர் தெரிவித்தார்.

ஆண்டு விழாவை முன்னிட்டு கலை மற்றும் கலாசார போட்டிகளும் நடத்தப் படவுள்ளன. இரண்டு நாள்கள் நடைபெறும் நிகழ்வுகளில் முதல் நாள் 16 ஆம் திகதி விளையாட்டுப் போட்டிகள் சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும். (இ)

## தோட்ட முகாமையாளர்களுக்கு விளக்கம் அளிக்கும் நிகழ்வுகள்

கொழும்பு, மே 08

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக கண்டி, மாத்தளை, கேகாலை மாவட்டங்களைச் சேர்ந்த தோட்ட முகாமையாளர்களுக்கு விளக்கம் அளிக்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு பேராதனை கெட்டம்பேயில் அமைந்துள்ள றோயல் மோல் விருந்தகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணி யின் பிரதித் தலைவரும் மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சருமான பழனி திகாம்பரம், மனித





வள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் புத்திர சிகாமணி மற்றும் தோட்ட முகாமையாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## உலகிலுள்ள முக்கிய நாடுகளுக்கு இலங்கை தூதுவர்கள் இல்லை?

கொழும்பு, மே 08

கடந்த பல மாதங்களாக உலகிலுள்ள முக்கிய நாடுகள் சிலவற்றுக்கு இலங்கையின் தூதுவர்களும், உயர் ஸ்தானிகர்களும் நியமிக்கப்படாத நிலை காணப்படுகிறது என வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு தூதுவர்களும், உயர் ஸ்தானிகர்களும் இல்லாத நாடுகளாக, அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா, பிரேஸில் மற்றும் கென்யா போன்றன காணப்படுகின்றன என்று அந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

## மேலும் பிரதி, ராஜாங்க அமைச்சு பதவிகள் ஐ.தே.கவுக்கு!

கொழும்பு, மே 08

ஐக்கிய தேசியக் கட்சிக்கு மேலும் பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்த வகையில் 6 அல்லது 8 பிரதி அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட உள்ளன எனக் கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்களுக்கு இவ்வாறு பதவி வழங்குதற்கு ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் நாடாளுமன்றை பிரதிநிதித்துவம் செய்யும் 4 ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்கும், இரண்டு புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பதவி வழங்குவதற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

புத்திக்க பத்திரண, எட்வட் குணசேகர, லகி ஜயவர்தன, ஆனந்த குமாரசிறி, ரஞ்சித் அலுவிஹார உள்ளிட்டவர்களுக்கு இந்தப் பதவிகள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## செவனகல தொழிற்சாலையில் கரும்பு அரைக்கும் நிகழ்வு

கொழும்பு, மே 08

செவனகல சீனித் தொழிற்சாலையில் இந்த வருடத்திற்கான கரும்பு அரைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை அதன் தலைவர் நவீன் அதிகாரம் தலைமையில் ஆரம்பமானது.

இம்முறை 3 ஆயிரத்து 517 ஹெக்டயர் நிலப்பரப்பில் கரும்பு அறுவடை மேற் கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் 10 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் உற்பத்தி செய்யப்படவுள்ளது.



கரும்பு அரைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டமையை அடுத்து செவனகல பிரதேசத்தில் சுமார் 4 ஆயிரம் குடும்பங்களின் வருமானம் அதிகரிக்கும் என்றும் டிரக்டர் உரிமையாளர்களும் ஏனைய 4 ஆயிரம் பணியாளர்களும் இதன் மூலம் நன்மையடைவார்கள் என்று செவனகல சீனித் தொழிற்சாலை தலைவர் நவீன் அதிகாரம் தெரிவித்துள்ளார்.

## 'எழுச்சி பெறும் பொலன்னறுவை' செயற் திட்டம்!



கொழும்பு, மே 08

'எழுச்சிபெறும் பொலன்னறுவை' அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்ட மின்னேரிய கோயிலின் மின்னேரிய தெய்வத்தின் திருவுருவச் சிலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்றுமுன்தினம் முற்பகல் திரைநீக்கம் செய்யப்

இந்த திருவுருவச்சிலை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் கபில ஜயம்பதியின் நன்கொடையிலும் ஹிங்குராங்கொட விமானப்படைத் தலைமையகத்தின் உத்தியோகத்தர்களது தொழிற் பங்களிப்பிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த திருவுருவச் சிலை நிர் வழங்கிய சகல விமானப் படையினருக்கும் ஜனாதிபதி நினைவுப் பரிசில்களை வழங்கினார். விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் கபில ஜயம்பதி ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசொன்றை வழங்கினார்.

அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்து

# இன, மத, மொழி பேதமின்றி தொண்டு செய்வதே செஞ்சிலுவையின் உன்னதப் பணி

**புன்னியாமீன்**

இன்று (08.05.2018) உலக செஞ்சிலுவை- செம்பிறை (World Red Cross and Red Crescent Day) தினமாகும். உலகில் யுத்தம் மற்றும் அனர்த்தங்களால் பாதிப்படைவோருக்கு மனிதாபிமான நோக்கில் நிவாரணப் பணிகளை மேற் கொள்ளும் முகமாக செஞ்சிலுவைச் சங்கம், மற்றும் செம்பிறைச் சங்கம் ஆகியன சர்வதேச ரீதியில் அமைக்கப் பட்டுள்ளன.

செஞ்சிலுவைச் சங்கம், மற்றும் செம்பிறைச் சங்கம் என்பன பெயரில் ஒரு வித்தியாசத்தைக் காட்டி நின்றாலும் கூட, அடிப்படையில் இரண்டு அமைப்புகளும் ஒரே நோக்கத்தை முன்னெடுப்பவைகளே. குறிப்பாக அரபுலக நாடுகளில் சிலுவை எனும் குறியீட்டுக்கும், வார்த்தைப்பதத்திற்கும் பதிலாக பிறை எனும் குறியீடும், வார்த்தைப் பதமும் பயன் படுத்தப்படுகின்றன.


தற்போது உலக நாடுகளில் 178 தேசிய கிளைகளினூடாக இந்த அமைப்புகள் மனிதாபிமானப் பணிகளை மேற் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. உலக செஞ்சிலுவை - செம்பிறை தினத்தின் பிரதான கருப்பொருள் யுத்தங்களினாலும் அனர்த்தங்களினாலும் பாதிப்புறும் மக்களுக்கு இன, மத, மொழி பேதமின்றி உதவி செய்வதும் முரண்பாடுகள் மிக்க தரப்பினரிடையே நடுநிலை வகித்து சமாதானத்திற்கு உதவுவதுமாகும்.

### மனிதப் புனிதரைக் கௌரவிக்கும் நாள்

இச்சங்கத்தின் ஸ்தாபகரான ஜீன் ஹென்றி டியூனண்ட் (Henry Dunant) பிறந்த தினமான மே மாதம் 8 ஆம் திகதி அம் மனிதாபிமான மிக்க மனிதப் புனிதரைக் கௌரவிக்க இத்தினத்தை உலக செஞ்சிலுவைச் சங்கத்தினமாக உலகத்தோர் அனுஷ்டிக்கின்றனர்.

ஜெனீவாவில் பக்தியும் கருணையும் குடி கொண்டிருந்த குடும்பமொன்றில் 1828 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் திகதி ஹென்றி டியூனண்ட் (Henry Dunant) பிறந்தார். தனது பெற்றோரிடமிருந்து கற்ற அனுபவங்கள் காரணமாக சிறுபராயத்திலிருந்தே சமூக சேவைகளில் ஆர்வமிக்கவராக விளங்கினார்.

சிறிய பராயத்திலே அயலவர்படும் இன்னல் கண்டு வேதனையுற்றார். சிறைக் கைதிகள் அனுபவிக்கும் கடும்



தண்டனைகளுக்காக மனம் நொந்தார். சிறைக் கூடங்களுக்குச் சென்று கைதிகளுக்கு ஆறுதல் கூறி வந்தார். பின்னர் வங்கித் தொழிலில் ஈடுபட்டு வாழ்க்கையில் முன்னேறினார். 1859 ஜூன் 25 இல் அவர் வட இத்தாலிக்குச் சென்ற போது அங்கு சோல்பரினோ யுத்தம் நடைபெற்றிருந்தது. ஆஸ்திரிய, பிரான்ஸிய, இத்தாலிய படைகளின் 3 லட்சம் பேர் 16 மணித்தியாலங்கள் போரிட்டதன் விளைவாக 40 ஆயிரம் பேர் போர்க்களத்தில் குற்றுயிராய்க் கிடந்தனர்.

இவ்வாறு குற்றுயிராய்க் கிடந்தவர்களிடத்தே எத்தரப்பினரும் அக்கறை காட்டவில்லை. இந்தக் காட்சி டியூனண்ட்டின் வாழ்க்கையில் புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்தது. ஊரவர் உதவியுடன் காயப்பட்டோருக்கு எத்தகைய பேதங்களுமின்றி சிகிச்சையளித்தார். பகை நிரம்பிய அச்சூழலில் இவரது பணி புரட்சிகரமானதாக அமைந்தது. பின்பு ஜெனீவா திரும்பிய டியூனண்ட் 'சோல்பரினோ நினைவுகள்' என்ற நூலை எழுதினார். இந்நூலில் அவர் மனித சமுதாயத்திற்கு உதவக்கூடிய அறிவுரைகளை வழங்கினார். இந்நிகழ்வினை அயடுத்து நாடு நாடாகச் சென்று யுத்தகளப் பணிகள் பற்றிய அவசியத்தை எடுத்துரைத்தார். பிற்காலத்தில் வறுமையின் பிடியில் அவர் சிக்கினாலும் ஈற்றில் நோபல் பரிசுக்குரியவரானார். 1910 ஒக்டோபர் 30 இல் உயிர் நீத்த ஹென்றி டியூனண்ட் (Henry Dunant) அவர்களின் பிறந்த நாளான (மே.8.1828) இந்நாள் 1948 ஆம் ஆண்டிலிருந்து சிறப்பு நாளாக அங்கீகரிக்கப்பட்டது.

### தொண்டர்களை இனங்காட்ட செஞ்சிவைச் சின்னம் தெரிவு

1863 இல் போர் நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட தொண்டர்களை இனங்காட்டுவ



தற்காக வெள்ளைப் பின்னணியில் செஞ்சிலுவைச் சின்னம் தெரிவு செய்யப்பட்டது. 1864 இல் ஐவர் அடங்கிய குழு ஒன்றினால் ஜெனீவாவில் மாநாடொன்று இடம்பெற்றது. இம்மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களே ஜெனீவா சாசனத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஒவ்வொரு மனிதனையும் அவரின் பெருந்தன்மைகளையும் கௌரவிக்கவே ஜெனீவா உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

இதில் தரையில் காயமடைந்த அல்லது நோய்வாய்ப்பட்ட அல்லது கப்பல் உடைந்ததால் பாதிக்கப்பட்ட ஆயுதந்தரித்தோரைக் காப்பாற்றல் யுத்தக் கைதிகளைப் பாதுகாத்தல் பொது மக்களைக் காத்தல் சர்வதேச ஆயுத மோதல்களினாலும் உள்நாட்டில் ஆயுத மோதல்களினால் பாதிக்கப்பட்டோரை பாதுகாத்தல் என்பன ஜெனீவா சாசனத்தில் காணப்படுகின்றன.

முதலாம் உலகப் போரின் பின்னர் சமாதானத்துக்கான தேவை உணரப்பட்டது. செக்கோஸ்லேவாக்கியாவில் சமாதானத்தை வலியுறுத்தி 1922 இல் ஈஸ்டர் திருநாளுக்காக மூன்று நாள் யுத்த நிறுத்தத்துக்கான வேண்டுகோள்விடப்பட்டது.

இதுவே பின்னர் செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாளாக அனுசரிக்கத் தூண்டுதலாக அமைந்தது எனலாம்.

1934ஆம் ஆண்டு டோக்கியோவில் இடம்பெற்ற செஞ்சிலுவைச் சங்கத்தினரின் 15வது அனைத்துலக மாநாட்டில் இது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இருப்பினும் 1948 ஆம் ஆண்டிலேயே இந்நாளை செஞ்சிலுவைச் சங்கத்தை ஆரம்பித்தவரான டியூனண்ட் அவர்களின் நினைவாக ஆண்டு தோறும் கொண்டாடும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

முதலில் இந்நாள் செஞ்சிலுவைச் சங்கநாள் என்றே அழைக்கப்பட்டது. எனினும் பின்னர் பல மாற்றங்களுக்குள்ளாகி 1984 இல் இருந்து இந்நாள் உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாள் என அழைக்கப்படுகிறது.

### செஞ்சிலுவையின் 7 கோட்பாடுகள்

செஞ்சிலுவை, செம்பிறை இயக்கம் உலகிலேயே மிக விரிவாக ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்புக்களில் ஒன்றாகும். செஞ்சிலுவை கிறிஸ்தவ சமயத்தைப் பிரதிபலிப்பதுபோல அமைந்துள்ளமையினால் இஸ்லாமிய நாடுகளில் அதன் சின்னம் செம்பிறையாகக் கொள்ளப்பட்டது. ஆரம்பத்தில் யுத்தங்களினால் காயமுற்ற மக்களுக்கு உதவும் நோக்கில் உருவாக்கப்பட்ட இவ்வமைப்பின் செயற்பாடுகள் தற்போது விரிவடைந்துள்ளன. செஞ்சிலுவை, செம்பிறை இயக்கம் ஏழு பிரதான கோட்பாடுகளின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றன.

01. மனிதாபிமானம்.
02. பாரபட்சமின்மை.
03. நடுநிலைமை.
04. சுதந்திரத் தன்மை.
05. தொண்டு புரிதல்.
06. ஒற்றுமை.
07. சர்வவியாபகத்தன்மை என்பனவே அவை.



> ஈழ யுத்தத்தின் போது அதன் சேவை மகத்தானது; மறக்க முடியாதது

யுத்தத்தினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிப்புறும் மக்களுக்கு இன, மத, மொழி, பிரதேச பேதமின்றி இவ்வியக்கம் அன்புக்கரம் நீட்டி உதவுகின்றது. முரண்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் எத்தரப்பினரையும் சாராது, அரசியல் வேறுபாடுகளில் அக்கறை காட்டாது, நடுநிலைமையுடனும், சுதந்திரத்துடனும் இது செயற்பட்டு வருகின்றது. அதே வேளை அந்தந்த நாடுகளின் சட்டத்துக்கு உட்பட்டே கருமமாற்றுகிறது.



1936 இல் இலங்கை மக்களைத் தாக்கிய மலேரியா மற்றும் கொள்ளை நோய்களைக் கட்டுப்படுத்தவென இலங்கை அரசுக்கு உதவிபுரியும் வண்ணம் பிரித்தானிய செஞ்சிலுவைச் சங்கத்தின் மத்திய கிளையொன்று இலங்கையில் அமைக்கப்பட்டது. இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர்



இக்கிளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கமென மாறியது.

1952 இல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் இலங்கை இணைந்து கொண்டது. ஆரம்பத்தில் இரத்ததானம் முதற் சிகிச்சை முதலுதவிக்கான பயிற்சி வழங்கல், நடமாடும் சுகாதார சேவை வழங்கல் விபத்துக்குள்ளானவர்களுக்கு உணவு உடை, உறையுள் என்பவற்றை வழங்கல். வறட்சி, வெள்ளப்பெருக்கு, யுத்தம் குண்டு வெடிப்பு, வறட்சிக்கு முகம் கொடுப்பதற்கான பயிற்சிகள், போன்ற சேவைகளை வழங்கியது.

இலங்கையில் வடக்குப் பிரதேசத்தில் யுத்தத்தில் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதில் இது முன்னின்று செயற்படுகின்றது. போரின் நிமித்தம் சிறைபட்டிருக்கும் கைதிகளைப் பார்வையிடல், தடுப்புக் காவல் நிலையங்களில் தடுத்து வைக்கப் பட்டுள்ள கைதிகளைப் பார்வையிடல், எதிர்த்தரப்பினரின் தடுப்புக் காவலிலுள்ள இராணுவத்தினரையும், பொதுமக்களையும் பார்வையிடல், காணாமற்போகும் நபர்களைக் கண்டுபிடிக்கும் விடயத்தில் அக்கறை காட்டுதல், யுத்தப் பிரதேசத்திலுள்ளவர்களை அழைத்து வருதல், குடும்பச் செய்திகளைப் பரிமாறுதல் போன்றவற்றுடன் இரு தரப்பினரிடையே சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடுகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருள் எடுத்துச் செல்லல், நோயாளிகளுக்குப் போக்குவரத்து வசதியளித்தல், தொழில் மீட்சிக்கு உதவுதல், மருத்துவ உதவி வழங்கல் தற்காலிக கூடாரங்களை அமைத்தல் போன்ற சமூகப் பணிகளிலும் ஈடுபடுகிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க சம்மேளனம் அதன் அனுபவத்தையும் சர்வதேச அமைப்புகளின் அனுபவமிக்க தொண்டர்களையும் இலங்கையில் நீண்டகால சேவையில் ஈடுபடுத்தி வருகின்றது. எனினும் பயங்கரவாத நடவடிக்கைகளினால் இத் தொண்டர்கள் பாதிப்புக்குள்ளாகியமையும் நோக்கத்தக்கது.

செஞ்சிலுவைச் சங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்படும் சேவைகள் அண்மைக்காலத்தில் சுனாமி அனர்த்தத்தின் போது மேற்கொண்ட நடவடிக்கைகள் தற்போதைய யுத்த நிலையில் மேற்கொண்டு வரும் சேவைகள் எமக்கு கண்கூடான உதாரணங்களாகும். ★

# இரத்த சோகை போன்ற நோயே தலசீமியா!


தலசீமியா ( Thalasscmia). இப்படி ஒரு நோயை நாம் அதிகம் கேள்விப்பட்டிருக்க மாட்டோம். இந்த நோய் அதிகம் நமக்கு அருகிலுள்ள மாலைதீவுகளில் பரவலாக பரவியுள்ளது. இந்த நோயை கட்டுப்படுத்தும் முகமாக மாலைதீவின் சுகாதார அமைச்சர் ஆமினா ஜமீல் சவுதி அரேபியா வின் ‘அல்வலீத் பவுண் டேஸனிடம்’ உதவி கோரி கோரிக்கை வைத்தார். இது நடந்தது 2010ல்.

தலசீமியா (பிரிட்டிஷ் ஒலிபெயர்ப்பு, தலசேமியா)என்பது பின்னடையும் தன்மையுள்ள மரபு சார்ந்த இரத்த நோய் ஆகும். தலசீமியாவில், மரபு குறைகள் ஹீமோகுளோபினைச் சேர்ந்த குளோபின் சங்கிலியின் குறைந்த சேர்க்கை வீதத்தால் ஏற்படுகிறது. ஒரு வகையான குளோபின் சங்கிலியின் குறைந்த சேர்க்கையால் இயற்கைக்கு மாறான மூலக்கூறுகள் ஏற் டுவதுக்கு வாய்ப்பு உண்டு. அதன் காரணமாக அனீமியா என்கிற தலசீமியாவின் தனித்தன்மை அறிகுறி உருவாகும்.

தலசீமியா என்பது சிறு வகை குளோபின்களின் சேர்க்கையின் அளவு குறித்த பிரச்சினை ஆகும். தலசீமியா பொதுவாக இயற்கையான குளோபின் புரதத்தின் குறைந்த உற்பத்தியை உருவாக்கும். அதுமட்டும் இல்லாமல் அது ஒழுங்குமுறை சீர்படுத்தும் மரபணுக்களால் ஏற்படலாம். ஹீமோகுளோபிநோபதீஸ் என்பது குளோபின் புரத சக்தியின் அசாதாரணமான அமைப்பைக் குறிக்கிறது. இரண்டு நிலையும் ஒன்று மற்றதன் மீது படிதல் ஆகும்.

இருப்பினும், சில நிலைகள் அசாதாரணமான குளோபின் புரதத்தை உருவாக்கி அதன் உற்பத்தியையும் பாதிக்கும் . ஆகவே, சில தலசீமியாக்கள் ஹீமோகுளோபிநோபதீஸ் ஆகும், பல ஆகாது. இரண்டில் ஏதேனுமொன்று அல்லது இரண்டு நிலைகளும் அனீமியாவை ஏற்படுத்தும்.

இந்நோய் குறிப்பாக மத்திய தரைக்கடலில் வசிக்கும் மக்களின் இடையே காணப்படும். அத்துடன் இதுவே தலசீமியா என்ற பெயரை வைக்க ஒரு காரணம் ஆகும். கிரிக் மொழியில் தலசா என்பது



கடல் என்றும் மற்றும் ஹீமா என்பது இரத்தம் என்றும் பொருள் ஆகும். ஐரோப்பாவில், அதிகளவில் இந்நோய் கிரீஸ் மற்றும் இத்தாலியின் சில பகுதிகளில் குறிப்பாக தெற்கு இத்தாலி மற்றும் போ என்ற பள்ளத்தாக்கில் காணப்படும்.


பெரும்பான்மையான மத்திய தரைக்கடல் தீவு களில் (பலீரிக்ஸ் தவிர) சிசிலி, சர்டினியா, மாலதா, கோர்சிகா, சிப்ரஸ், மற்றும் கிரேட் பகுதிகள் அதிகளவில் பாதிக்கப்பட்டன. மத்திய தரைக்கடலின் மற்ற பகுதியை சேர்ந்த மக்கள், மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியைச் சேர்ந்த மக்களில் தலசீமியா அதிகளவில் காணப்படுகிறது. அத்து டன் மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் வட ஆபிரிக்காவைச் சேர்ந்த மக்களிலும் இந்நோய் காணப்படுகிறது.

மத்தியத் தரைக்கடல் பகுதியிலிருந்து அதிக தொலைவிலுள்ள தெற்கு ஆசிய மக்களை இந் நோய் அதிகளவில் தாக்கி, உலகிலேயே மாலைதீவுகள் என்ற பகுதியே இந்நோயால் மிக அதிகளவில் பாதிக்கப்பட்ட பகுதி என்ற பெயரை வாங்கியது.

அப்பகுதி மக்களிடையே மலேரியா அதிகளவில் காணப்படும். எனினும் தலசேமியாவால் மலேரியா வின் தாக்கம் அப்பகுதி மக்களில் குறைவாகவே காணப்பட்டது.

பொதுவாக, தலசீமியா ஈரபதம் தட்ப வெட்பநிலைக் கொண்ட இடங்களில் தென்படும். இந்நோய் எல்லாவித மக்களையும் பாதிக்கும்.

தலசேமியா குறிப்பாக அரபு நாடு, ஆசிய நாடு மற்றும் மத்திய தரைக்கடல் பகுதிகளில் வசிக்கும் மக்களைச் சார்ந்த நோய் ஆகும். மாலைதீவுகள் தான் உலகிலேயே அதிகளவில் தலசேமியாவால்




பாதிக்கப்பட்டுள்ளன அதிக பட்சமாக 18% மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கணக்கிட்ட நிகழ்வுகள் 16% சிப்ரசிலும், 1% தாய்லாந்திலும், 3-8% பங்களாதேஷிலும், சீனாவிலும், இந்தியாவிலும், மலேசியாவிலும் மற்றும் பாகிஸ்தானிலும் காணப்படுகிறது. இதுபோக லத்தீன் அமெரிக்க மற்றும் மத்திய தரைக்கடல் நாடுகளில் ( கிரீஸ், இத்தாலி, போர்ச்சுக்கல், ஸ்பெயின், மற்றும் பல) இந்நோயின் நிகழ்வுகள் உண்டு.

உலகில் ஏறத்தாழ 6-8 கோடி மக்கள் பீட்டா தலசீமியா என்ற நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது மிக சரியான மதிப்பீடு அல்ல. பெரும்பாலான பகுதிகளில் இந்நோயின் விழிப்புணர்வு இல்லை. மத்திய கிழக்கு மற்றும் ஆசியா போன்ற நாடுகளில் இந்நோய்களின் பரிசோதனைக்கு தேவையான வசதிகள் இல்லாதமையால் சரியான எண்ணிக்கை தெரியவில்லை. இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஈரான் போன்ற நாடுகளில் குறைந்த அளவில் மரபு பரிசோதனை மற்றும் ஆலோசனை செய்வதால் இந்நாடுகளில் அதிகளவில் தலசீமியா காணப்படுகிறது.

### சிகிச்சை முறைகள்


தலசேமியா மைனர் கொண்ட நோயாளிகளுக்கு பொதுவாக தனிமுறை சிகிச்சைகள் தேவைப்படா ஆனால் தலசீமியா மேஜர் கொண்ட நோயாளிகளுக்கு நீடித்த காலமான இரத்த ஏற்றுதல் பிணி நீக்கல், இரும்பு இடுக்கு இணைப்பு, மண்ணீரல் அகற்றம் மற்றும் அல்லோஜெனிக்ஹீமொபோஃபாய்டிக் மாற்று போன்ற சிகிச்சைகள் தேவைப்படும்.



### இரத்த அழிவுச் சோகைக்கான அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள்:

மேஜர் இரத்த அழிவுச் சோகையுள்ள பிள்ளைகள் குழந்தைப் பருவத்தின் தொடக்கத்தில் பின்வரும் அடையாளங்கள் மற்றும் அறிகுறிகளைக் காட்டலாம். இரத்த சோகையுள்ள பிள்ளை களுக்கும் இதே அறிகுறிகள் இருக்கும்:

- ★ வெளிறிய தோல்
- ★ சோர்வு
- ★ பலவீனம்
- ★ விரைவான சுவாசம்
- ★ வேறு அறிகுறிகள் பின்வருவனவற்றை உட்படுத்தக்கூடும்:
- ★ எரிச்சலடைதல்
- ★ தோல் மஞ்சள் நிறமாக நிறமாற்றமடைதல் (மஞ்சட்காமாலை)
- ★ மந்தமான வளர்ச்சி
- ★ அடிவயிறு வெளித்தள்ளிக்கொண்டிருத்தல்
- ★ முக எலும்பு உருக்குலைதல்
- ★ அடர்நிற சிறுநீர்



### காரணங்கள்

இரத்த ஒழுங்கின்மை என்பது ஹிமோ கு ளோபின் உற்பத்தி செய்வதைக் கட்டுப்படுத்தும் மரபணுவிலுள்ள குறைபாட்டினால் ஏற்படுகிறது. குறைபாடுள்ள மரபணு வழக்கமான ஹீமோகுளோபினை உற்பத்தி செய்வதில் இயலாமையை ஏற்படுத்துகிறது. பிள்ளைகள் இந்த மரபணுவை பெற்றோரில் ஒருவர் அல்லது இருவரிடமுமிருந்து சுதந்தரித்துக்கொள்கின்றனர். ஒரு பிள்ளை தவறான மரபணுவை பெற்றோர் இருவரிடமுமிருந்தும் சுதந்த ரித்துக் கொண்டால், அந்தப் பிள்ளைக்கு மேஜர் இரத்த அழிவுச் சோகை ஏற்படும். தவறான மரபணு ஒரு பெற்றோர் மூலம் மாத்திரம் கடத்தப்பட்டால் பிள்ளைக்கு மைனர் இரத்த அழிவுச் சோகை ஏற் படும். பின்பு, அந்தப் பிள்ளை குறைபா டுள்ள மரபணுவைக் காவிச் செல்பவனாக இருப்பான்.

> சிகிச்சையுடன் இரத்தம் ஏற்றுவதும் கூட அவசியம்

### இரத்த அழிவுச் சோகையுள்ள உங்கள் பிள்ளைக்கு ஒரு மருத்துவர் செய்யக்கூடியவை:

நீங்கள் அவதானித்த அடையாளங்கள் மற்றும் அறிகுறிகளை உங்கள் பிள்ளையின் மருத்துவர் பரிசீலனை

**இன்று தலசீமியா நோய் தினம்**

செய்வார். இரத்தப் பரிசோதனைகள் மூலம் தான் நோயைக் கண்டறிந்து உறுதிசெய்யமுடியும். மைனர் இரத்த அழிவுச் சோகைக்கு சிகிச்சை தேவையில்லை. மேஜர் இரத்த அழிவுச்சோகைக்கு மாதாந்தர இரத்தமேற்றுதல் மூலமாகச் சிகிச்சை செய்யப்படும். திரும்பத் திரும்ப இரத்தமேற்றும்போது உங்கள் பிள்ளையின் உடலில் இரும்புச் சத்து, அளவுக்கதிகமாகிவிடும். இது இதயம் அல்லது ஈரலில் சேதத்தை ஏற்படுத்தும். மேலதிகமான இரும்புச் சத்தை மருந்துகளின் மூலமாக அகற்றுவதன் மூலம் இந்த வகையான சேதத்தைத் தடுக்கலாம்.

எந்த வகை இரத்த அழிவுச்சோகையை யுடையவர்களும் மரபியல் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளவேண்டும். பிரசவத்துக்கு முன்னான பரிசோதனைகளும் செய்யப்படும்.

இந்த வகையான இரத்த ஒழுங்கின்மையுடைய ஒரு பிள்ளைக்குப் பித்தப்பைக் கற்கள் இருக்கலாம். வேறு பிள்ளைகளுக்கு மந்தமான வளர்ச்சி இருக்கலாம். இந்த ஒழுங்கின்மைக்குச் சிகிச்சையளிக்கப்படாது விடப்படும்போது, பிள்ளைகளுக்கு இதயச் செயலிழப்பு மற்றும் தொற்றுநோய்களால் மரணம் ஏற்படலாம். சிகிச்சையளிக்கப்படும்போது, மிகப்பெரிய சிக்கல்கள் அளவுக்கதிகமான இரும்புச்சத்துடன் சம்பந்தப்பட்டவையாக இருக்கின்றன.

### எப்போது மருத்துவ உதவியை நாட வேண்டும்

உங்கள் பிள்ளை இரத்த சோகைக்கான அறிகுறிகளைக் காண்பித்தால், முடிந்தளவு விரைவாக உங்கள் பிள்ளையின் மருத்துவரைச் சந்திக்கவும். உங்களுக்கு இரத்த அழிவுச் சோகைக்கான ஒரு குடும்ப வரலாறு இருந்தால், நீங்கள் ஒரு நோய்க் காவியா என்பதை அறிவதற்காக பரிசோதிக்கப்பட வேண்டும்.

### முக்கிய குறிப்புகள்

இரத்த அழிவுச் சோகை என்பது ஹீமோகுளோபினை உற்பத்தி செய்வதைக் கட்டுப்படுத்தும் மரபணுவிலுள்ள ஒரு குறைபாட்டினால் ஏற்படும் ஓர் இரத்த ஒழுங்கின்மை.

இது மத்தியதரை, ஆபிரிக்கா, மற்றும் ஆசியா நாட்டின் வம்சாவளியைச் சேர்ந்த பிள்ளைகளை மிகவும் பொதுவாகப் பாதிக்கும், மரபுவழியாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட இரத்தச் சோகையின் ஒரு வகை ஆகும். மேஜர் இரத்த அழிவுச் சோகையுள்ள பிள்ளைகள் வெளிறியவர்களாகவும் விரைவான சுவாசமுடையவர்களாகவும் காணப்படுவார்கள்.

மாதாந்தர இரத்தமேற்றுதல்கள் மூலம் இரத்த அழிவுச் சோகைக்குச் சிகிச்சையளிக்கப்படுகிறது. ★




# கல்விக் கதிர் வெளியீடு


## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 31

### பகுதி - II

39) ஆதிகாலத்தில் உணவுப் பொருள்களை பாதுகாப்பாக வைப்பதற்கும் பிராணிகள் தீண்டாத வண்ணம் பாதுகாக்கவும் பயன்படுத்தப்பட்ட பாரம்பரிய உபகரணம்

1. திருகணை 2. உறி 3. பரண் 4. அலுமாரி

40) இக் காந்தத்தின் பெயர்



1. பரியிலாடக் காந்தம்
2. சட்டக் காந்தம்
3. குண்டுமுனைக் காந்தம்
4. U வடிவக் காந்தம்

41) எமது நாட்டு அரசினால் எமக்கு இலவசமாக வழங்கப்படும் சேவை

1. மின்சாரம் 2. பருவகால அனுமதிச் சீட்டு
3. ஆரம்பக்கல்வி 4. தபால்

42) ஊதா நிறப்பூ பூக்கும் தாவரம் எது?

1. பூசணி 2. பாகல் 3. வற்றாளை 4. வெள்ளை

43) ஆட்பதிவுத் திணைக்களம் வழங்கும் அட்டை எது?

1. குடும்ப அட்டை 2. நிவாரண அட்டை
3. தேசிய அடையாள அட்டை 4. வரவின்மை அட்டை

44) ஆடையில் பட்டதார்க் கறையை போக்க உதவுவது?

1. தேங்காய் எண்ணெய் 2. விளக்கெண்ணெய்
3. தேசிக்காய் 4. மண்ணெண்ணெய்


45) நெத்தெலியில் அதிகம் அடங்கியுள்ள போசணைப் பொருள் எது?

1. கல்சியம் 2. மாப்பொருள் 3. புரதம் 4.இலிப்பிட்டு

46) பின்வருவனவற்றில் பூக்காத தாவரம் எது?

1. மா 2. வேம்பு 3. தென்னை 4. பன்னம்

47) வீதி சமிக்கை பலகையில் A, B, C ஆகிய நிறங்கள் எவை?





1. சிவப்பு, பச்சை, மஞ்சள்
2. பச்சை, சிவப்பு, மஞ்சள்
3. பச்சை, மஞ்சள், சிவப்பு
4. சிவப்பு, மஞ்சள், பச்சை


## 32 பகுதி - I

அடுத்து வரவேண்டிய பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க

1)




2)




3) தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான படம் எது?

மின்கலம் - வெளிச்சம் - கையாளல் இலகு




❖ ஒவ்வொரு கவிதையிலும் உள்ள வெற்றிடத்திற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க

4) பூ விரிகின்றது
மணம் வீசுகின்றது
பூ வாடுகின்றது
இதழ் ............................

1. ஆடுகின்றது 2. விழுகின்றது 3. பறக்கின்றது






'உனக்குப் பெருமை வேண்டுமானாலும்
உற்சாகம் வேண்டுமானாலும்,
பிற மனிதனுக்குத் தொண்டு
செய்வதில் போட்டி போடுவதன் மூலம்
தேடிக்கொள்!'
— பெரியார் —



# வீண் உபதேசம்

ஒரு காட்டில் பல குரங்குகள் கூட்டமாக வசித்து வந்தன.

குளிர்காலத்தில் ஒருநாள் மிகவும் கடுமையான குளிராக இருந்தது. குரங்குகளால் குளிரைத் தாங்க முடியவில்லை.

கொஞ்சம் நெருப்பு கிடைத்தால் சருகுகளைப் போட்டுத் தீமூட்டி குளிர் காயலாம் என்று ஒரு கிழக் குரங்கு கூறியது.

நெருப்புக்கு எங்கே போவது என்று குரங்குகள் யோசித்துக் கொண்டிருந்தபோது ஒரு மின்மினிப் பூச்சி பளிச் பளிச் சென்று மின்னியவாறு பறந்து சென்று கொண்டிருந்தது.

அதைக் கண்ட ஒரு குரங்கு அதோ நெருப்பு போகிறது என்று கூறியது. மற்றொரு குரங்கு அந்த மின் மினிப் பூச்சியைப் பிடித்து வந்து தரையில் போட்டது.

மற்ற குரங்குகள் சுற்றிலும் கிடந்த குப்பை கூளங்களைச் சேகரித்து வந்து மின்மினிப் பூச்சி மீது போட்டன.

பிறகு குரங்குகள் நெருப்பு கொழுந்து விட்டு எரியப் போகிறது என எதிர்பார்த்து சூழ்ந்து அமர்ந்து கொண்டன. ஆனால், தீ எரியும் வழியைக் காணவில்லை. பிறகு குரங்குகள் வாயினால் குப்பையை ஊதி நெருப்பை எரிய விடும் முயற்சியில் ஈடுபட்டன.

மரத்தில் அமர்ந்து குரங்குகளின் கோமாளிக் கூட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு பறவை கலகலவென்று சிரித்தபடி மரத்தை விட்டிறங்கி கீழே வந்து அமர்ந்தது.


பிறகு குரங்குகளை நோக்கி நண்பர்களே மின்மினிப் பூச்சியை நெருப்பு என்று எண்ணிக் கொண்டு தீமூட்ட வீண் பிரயாசை எடுக்கிறீர்கள். நீங்கள் என்னதான் வாயால் ஊதினாலும் மின்மினிப் பூச்சியிடமிருந்து நெருப்பு வரவே வராது. வீண் வேலையை விட்டுவிடுங்கள் என்று புத்திமதி கூறிற்று.

உனக்கு ஒன்றும் தெரியாது. வாயை மூடிக்கொண்டு உன் வேலையைப் பார் என்று கூறிவிட்டு குரங்குகள் மறுபடியும் குப்பையை வாயால் ஊதித் தீ உண்டாக்க முயற்சியெடுத்தன.

பறவை, குரங்குகளின் முட்டாள்தனத்தை எண்ணிப் பரிதாபப்பட்டு திரும்பத் திரும்ப குரங்குகளுக்கு புத்திமதி கூறிக் கொண்டிருந்தது. இதனால் கோபமுற்ற குரங்குகள் பறவை மீது பாய்ந்து அதனைப் பிடித்து தரையில் மோதிக் கொன்று விட்டன.

தீய குணம் படைத்தவர்களுக்கு உபதேசம் செய்வதே வீண் வேலை.

## 10 வித்தியாசம் கண்டுபிடியுங்கள்





## தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்'
சிறுவர் சஞ்சிகைப் பிரிவு
30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

# தமது கடமைகளை சரியாக செய்யத் தவறியவர் தமிழ் மக்களை உருக்குலைக்க முற்படக்கூடாது!

வவுனியா, மே 02

தமது கடமைகளை சரியாக செய்யத் தவறியவர் தமிழ் மக்களை உருக்குலைக்க முற்படக்கூடாது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

மேலும், பல்வேறு அரசியல் குழப்ப நிலைகள் தென்னிலங்கையிலும், வடக்கிலும் ஏற்பட்டுள்ள நிலையில், வட மாகாண முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் புதிய கட்சி ஒன்றை அமைத்து அடுத்து வரும் மாகாண சபையில் போட்டியிடப் போகிறார் எனச் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே சி.சிவமோகன் எம்.பி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விக்னேஸ்வரன் தென்னிலங்கையை அடிப்படையாகக் கொண்டவர், நாடு சுதந்திரம் பெற்றபோது தென்னிலங்கையைச் சேர்ந்த தமிழர்கள் தான் எம்மை கொழும்பில் அடைமானம் வைத்திருந்தார்கள்.



சிவமோகன் எம்.பி. கூறுகிறார்

தமிழர்களின் உரிமைகளையும் அடைமானம் வைத்திருந்தார்கள். பிரித்தானியர் சுதந்திரம் வழங்கிய போது தமிழருக்கும் தனியான ஆட்சி அலகு தேவை எனக் கோரியிருந்தால் நிச்சயமாக கிடைத்திருக்கும்.

அல்லது சமஷ்டி முறையிலான ஒரு யாப்பு வகுக்கப்பட்டிருக்கலாம் ஆனால் இவை அனைத்தையும் தவறவிட்டது தென்னிலங்கையின் தமிழ் தலைமைகள். அந்த நேரத்தில் அவர்கள் தான் எம்மை ஆண்ட ஆதிக்க சக்திகளாக இருந்தனர்.

அவர்கள் அந்நியரின் கைகளில் துவண்டு போய் இருந்தார்கள். அதுபோல் மீண்டும் ஒரு தென்னிலங்கை சிங்கள ஆதிக்கத்திலும், தென்னிலங்கை சிங்கள இனத்துடன் சம்மந்தம் வைத்திருக்கின்ற விக்னேஸ்வரன் போன்றவர்கள் எல்லாம் எமது மக்களின் தலைவிதியை தீர்மானிக்க முடியாது.

அப்படி விக்னேஸ்வரன் அவர்கள் வெளியேறி புதிய கட்சி தொடங்கினால் அவரது முகம் உடைத்தெறியப்பட்டு உண்மை வரும். பொய்மையின் வெளிப்பாட்டில் தான் அவரது செயற்பாடுகள் இதுவரை இருந்தது.

ஆன்மீகம் என்ற ஒரு பூச்சு பூசிக் கொண்டு அவரது செயற்பாடுகள் தவறாகவே இருந்தன. வடமாகாண சபையில் இதுவரை எத்தனை கணக்காய்வு அறிக்கைகள் வந்தன. கணக்காய்வு அறிக்கைகளைக் கூட ஒழுங்காக செய்யவில்லை. தனது கடமைகளை சரியாக செய்யவில்லை. நிர்வாகத்தை சரியாக செய்யவில்லை. அப்படியான இவர் தமிழ் மக்களை உருக்குலைக்க முற்படக் கூடாது. பெற்றுக் கொண்ட பதவியை சரியாக நிறைவேற்ற வேண்டும். அதை நிறைவேற்ற முடியாவிட்டால் ஒதுங்கி நின்று பார்க்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க 100)


# பொலன்னறுவை சிறுவர் பூங்கா ஜனாதிபதி தலைமையில் திறப்பு

கொழும்பு, மே 08

பொலன்னறுவை இசிபத்தன மாவத்தையில் அமைக்கப்பட்டுள்ள இசிபத்தான சிறுவர் பூங்காவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் திறந்து வைத்தார்.

உலக வங்கி மற்றும் ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியில் உள்ளூராட்சி மன்ற சேவைகளை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் இந்த சிறுவர் பூங்கா நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வட மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் பேசல ஜயரத்ன உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டனர்.



# மின் தடை

யாழ்ப்பாணம், மே 08

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை -

**யாழ் பிரதேசத்தில்** - சுருவில், மெலிஞ்சிமுனை ஆகிய இடங்களிலும் -

**வவுனியா பிரதேசத்தில்** - பண்டாரிக்குளம் கிராமம், தவசிக்குளம் கிராமம், அட்டம்பஸ்கட கிராமம் ஆகிய இடங்களிலும் -

**மன்னார் பிரதேசத்தில்** - தலைமன்னார் கிராமம் ஆகிய பிர தேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ

# தேசிய கறுவா வாரம் நேற்று ஆரம்பம்!

கொழும்பு, மே 09

ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு ஒழுங்கு செய்துள்ள தேசிய கறுவா வாரம் நேற்று ஆரம்பமானது.

இலங்கை கறுவா சுகவாழ்வுக்கு என்பது இதன் தொனிப் பொருளாகும்.

நாட்டில் கூடுதலாக கறுவா செய்கை மேற்கொள்ளப்படும் அம்பாந்தோட்டை, களுத்துறை, இரத்தினபுரி மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும்.

# காணிகளை இழந்துள்ள விவசாயிகளுக்கு நட்டஈடு

மொரகஹகந்த நீர்ப்பாசன திட்டத்தினால் தமது காணிகளை இழந்த விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கப்படவுள்ளது. மொரகஹகந்த நீர்த்தேக்கத்தை வடமேல் மாகாணத்திற்கு திசை திருப்பியதன் காரணமாக 264 குடும்பங்கள் தமது இருப்பிடங்களை இழந்துள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு பேர்ச்சஸ் வயல் நிலத்திற்கு 6 ஆயிரம் ரூபாவும் ஒரு பேச்சர்ஸ் காணி நிலத்திற்கு 10 ஆயிரம் ரூபாவும் நட்ட ஈடாக வழங்கப்படவுள்ளது என நீர்ப்பாசனத் திட்டத்தின் பொறியியலாளர் நீல் பண்டார தெரிவித்துள்ளார்.

# அலங்கார உற்சவம்

சுழிபுரம், மே.08

தொல்புரம் பத்தனையம்பதி ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறுகின்றது.

எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை அலங்கார உற்சவ பூர்த்தியும் கும்பாபிஷேக தின மணவாளக் கோலம் மாலை 7 மணிக்கு விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்தும் திருவூஞ்சல் நிகழ்வும் இடம்பெறும். (இ

# சமுர்த்தி வங்கியை மத்திய வங்கியின் கீழ் கொண்டு வருவதற்கு ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்கிறார் எஸ்.பி.

கொழும்பு, மே 08

சமுர்த்தி வங்கியை மத்திய வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொண்டுவருவதற்கு ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திசநாயக்க தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி வங்கியை விரைவில் மத்திய வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித் துள்ளமை குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே முன்னாள் அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் சட்டத்தின் கீழேயே சமுர்த்தி வங்கி இயங்குகின்றது இதன் காரணமாக இதனை மத்திய வங்கியின் கீழ் கொண்டுவர முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

சமுர்த்தி சட்டத்தில் மாற்றங்களை மேற்கொள்ளவேண்டும் என்றால் நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம் என குறிப்பிட்டுள்ள முன்னாள் அமைச்சர், பிரதமருக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைப்பதைத் தடுக்கப் போகிறோம்.

மத்திய வங்கியை பட்டப்பகலில் கொள்ளையடித்தார்கள் நாங்கள் ஏழை மக்களின் பணத்தில் பிரதமர் கைவைப்பதற்கு அனுமதிக்கமாட்டோம்.


மக்கள் மத்திய வங்கியை தற்போது நம்புவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(சு)



# பெண்கள், குழந்தைகள் உட்பட 45 பேரை இரக்கமின்றி கொடூரமாக கொன்ற கால்நடை சூறையாடல் கும்பல்

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் உள்ள கிராமம் ஒன்றில் கால்நடைகளை அபகரிக்கும் கும்பல் பெண்கள், குழந்தைகள் உள்பட 45 பேரை ஈவு இரக்கமின்றி கொலை செய்துள்ளனர்.



ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவில் உள்ள காதுனா மாநிலம் ப்ரின் க்வாரி என்ற கிராமம் ஒன்றில் கடந்த சனிக்கிழமை இந்தக் கொடூரச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஆயுதம் தாங்கிய கால்நடைகளைச் சூறையாடும் கும்பல் அந்தக் கிராமத்தில் உள்ள 45 பேரைக்கொன்றுள்ளனர். இதில், பெண்கள் மற்றும் குழந்தைகள் அதிகமானோர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலியானவர்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ள பிராந்திய அரசு, மேற்படி கும்பலைச் சேர்ந்தோர் விரைவில் கூண்டோடு அழிக்கப்படுவார்கள் என உறுதிபட கூறியுள்ளது. கடந்த மாதம் இதேபோல, 14 சிறார்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நாட்டில் பல கிராமப் பகுதிகளில் கால்நடைகளை சூரையாடுவதற்கெனப் பல குழுக்கள் உள்ளன.

கால்நடைகளை அபகரித்து இறைச்சி நிறுவனங்களிடம் விற்று லாபம் பார்ப்பது இவர்களின் வழக்கமான ஒன்றாக உள்ளது. சூறையாடலின் போது கிராமத்தினர் இடையூறு செய்தால் மொத்தமாக அவர்களைக் கொல்லவும் இந்தக் குழுக்கள் தயங்குவது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.


# சூரிய ஒளியின் மூலம் தண்ணீர் சுத்திகரிப்பு

## விஞ்ஞானிகள் சாதனை

லண்டன், மே 08

சூரிய ஒளியை பயன்படுத்தி புதிய தொழில்நுட்பத்தின் மூலம் விஞ்ஞானிகள் தண்ணீர் சுத்திகரிப்பு முறையை கையாண்டு சாதனை படைத்துள்ளனர்.

எந்திரம் மூலம் தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டு வரும் இந்த காலத்தில் தற்போது சூரிய ஒளியை பயன் படுத்தி புதிய தொழில் நுட்பத்தின் மூலம் குடிதண்ணீரை விஞ்ஞானிகள் சுத்திகரித்துள்ளனர்.



கடந்த 2000 ஆண்டுகளுக்கு முன்பு கிரேக்க தத்துவ இயல் விஞ்ஞானி அரிஸ்போட்டில் தண்ணீரை சுத்திகரிக்க புதிய முறையை கையாண்டார். முக்கோண வடிவிலான கறுப்பு நிற கார்பன் பேப்பரை தண்ணீரில் மூழ்கடித்து அதைச் சுத்திகரித்தார்.

அதைத் அடிப்படையாக கொண்டு சூரிய ஒளியை பயன்படுத்தி புதிய தொழில் நுட்பத்தின் மூலம் விஞ்ஞானிகள் தண்ணீர் சுத்திகரிப்பு முறையை கையாண்டு வெற்றி பெற்றுள்ளனர். மிகக் குறைந்த செலவில் இதை செயற்படுத்த முடியும். இயற்கை பேரிடர் காலங்களில் இது மிகவும் உதவிகரமாக இருக்கும் என விஞ்ஞானி கள் தெரிவித்துள்ளனர்.

# ஆப்கன் வாக்காளர் மையத்தில் குண்டுவெடிப்பு; 12 பேர் உயிரிழப்பு

காபூல், மே 08

ஆப்கானிஸ்தானின் கோஸ்ட் மாகாணத்தின் கிழக்குப் பகுதியில் வாக்காளர்பதிவு மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 12 பேர் உடல் சிதறி உயிரிழந்துள்ளனர்.



ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத்துக்கு விரைவில் தேர்தல் நடைபெற உள்ளநிலையில், கடந்த ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி முதல் புதிய வாக்காளர்களுக்கான சேர்க்கை முகாம் நாடு முழுவதும் நடைபெற்று வருகின்றது. இந்த வாக்காளர்கள் முகாம் மீது பயங்கரவாதிகள் இதுவரை 7 முறை தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கடந்த மாதம் காபூல் நகரில் வாக்காளர் முகாம் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 60 பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் கோஸ்ட் மாகாணத்தின் கிழக்கு பகுதியில் நேற்றுமுன்தினம் தற்காலிக வாக்காளர் சேர்ப்பு முகாம் அமைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தன. அப்போது அங்கு வைக்கப் பட்ட குண்டு வெடித்ததில் ஒரு பெண் உட்பட 12 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த 30 பேர் அருகிலுள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் இந்த தாக்குதலில் சாவு எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

# அமெரிக்காவுக்கு ஈரான் எச்சரிக்கை!

ஈரானுடனான அணுவாயுத உடன்படிக்கையிலிருந்து அமெரிக்கா விலகினால் அது வரலாற்று தவறாக அமையும் என ஈரான் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.



ஈரானின் தேசிய தொலைக்காட்சிமூலம் நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையிலேயே ஜனாதிபதி ஹசான் ருகானி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ட்ரம்ப் என்ன முடிவை எடுத்தாலும் ஈரானின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வது மற்றும் ஆயுதங்கள் தொடர்பில் எந்த வித விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை எனவும் ஈரான் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# 96 வயதில் பட்டம்பெற்ற ஸ்பெயின் ராணுவ வீரர்!



காபுல், மே 08

இரண்டாம் உலகப்போரில் பங்கேற்ற ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர் 96 வயதில் பட்டம் பெற்று தனது ஆசைஸ்ய நிறைவேற்றியுள்ளார்.

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர் பாப் பார்கர். 96 வயதான இவர் இரண்டாம் உலகப் போரில் பங்கேற்ற ராணுவ வீரர். கல்லூரியில் இறுதி ஆண்டு படித்தபோது இரண்டாம் உலகப்போர் தீவிரமாக இருந்தது. எனவே, இவர் போருக்கு அனுப்பப்பட்டார்.

போர் முடிந்த பிறகு அவரால் கல்லூரி படிப்பை தொடர முடியவில்லை. டொலீடோ நகருக்குத் திரும்பிய அவர் பணியில் தீவிரமாக இருந்தார். அதனால் அவரால் புட்டப் படிப்பை முடிக்க முடியவில்லை.

இதற்கிடையே வயது முதிர்ந்த நிலையில் இருந்த அவர் பட்டப்படிப்பை முடிக்க வேண்டும் என விரும்பினார். டொலீடோ பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படித்து பட்டப் படிப்பை முடித்தார்.

அதைதொடர்ந்து 68 ஆண்டுகளுக்குப் பிறகு தனது 96 வயதில் அவர் பட்டம் பெற்றார். அவரைக் குடும்பத்தினரும், நண்பர்களும் வாழ்த்தியுள்ளனர்.

# முதன்முறையாக ரோபோ மூலம் தண்டுவட சத்திர சிகிச்சை

வெஷிங்டன், மே 08

அமெரிக்காவைச் சேர்ந்த இந்திய வம்சாவளி டாக்டர் நீல் மல்கோத்ரா தலைமையிலான குழுவினர் முதன் முறையாக ரோபோ மூலம் தண்டுவட சத்திர சிகிச்ஙையை வெற்றிகரமாக நடத்தி சாதனை படைத்துள்ளனர்.

'கார்டோமோ' எனப்படும் குறுத்தெலும்பு கட்டி புற்றுநோய் கழுத்தில் மண்டை ஓடும், தண்டுவடமும் சேரும் இடத்தில் உருவாகின்றது. இதுமெதுவாகவளர்ந்துபல ஆண்டுகள் கழித்து உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும். இது 10 லட்சத்தில் ஒருவருக்கு அபூர்வமாக ஏற்படும்.

இத்தகைய நோய் பாதித்த ஒருவருக்கு 'ரோபோ'வை பயன்படுத்தி புற்றுநோய் கட்டியை அகற்றி சத்திர சிகிச்சை நடத்தப்பட்டுள்ளது. இந்த அரிய சாதனை அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழக மருத்துவ கல்லூரியில் நிகழ்த்தப்பட்டது.

அமெரிக்காவைச் சேர்ந்த இந்திய வம்சாவளி டாக்டர் நீல் மல்கோத்ரா தலைமையிலான குழுவினர் இந்த சத்திரசிகிச்சையை வெற்றிகரமாக நடத்தினார்கள். இதன் மூலம் தண்டுவடத்தில் முதன் முறையாக 'ரோபோ' உதவியுடன் சத்திரசிகிச்சை நடத்தியவர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.



இத்தகைய சத்திரசிகிச்சை மிகவும் ஆபத்தானது. சத்திரசிகிச்சையில் போது எலும்பும், தசையும் உடைந்து விட்டால் நுகரும் தன்மை பாதிக்கப்படும். பக்கவாதம் தாக்கும் அபாயமும் உள்ளது.

எனவே, மிகவும் கவனமாக 'ரோபோ' கையாளப்பட்டது. தற்போது நோயாளி பூரணமாக குணமடைந்து விட்டார். அவர் தன் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கர்நாடகா 4 டி.எம்.சி நீரை திறந்துவிட வேண்டும்; உச்ச நீதிமன்றில் தமிழக அரசு கோரிக்கை

காவிரியில் தண்ணீர் திறக்க முடியாது எனக் கூறி கர்நாடகா சார்பில் உச்ச நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.




இந்த நிலையில், தமிழகத்தின் சார்பிலும் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், உச்ச நீதிமன்ற உத்தரவுபடி உடனடியாக 4 டி.எம்.சி. தண்ணீர் திறக்க வேண்டும், காவிரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக அமைக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால், அதை 6 வாரங்களுக்குள் அமைக்காமல் காலம் தாழ்த்திய மத்திய அரசு 6 ஆவது வார முடிவில் 'ஸ்கீம் என்றால் என்ன என்று விளக்கம் கேட்டு இழுத்தடித்து வருகிறது.

இந்த வழக்கு மே 3 ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. உச்சநீதிமன்றம் அறிவித்தப்படி மேலாண்மை திட்டத்தை மத்திய அரசு தாக்கல் செய்யவில்லை. காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பான வரைவு திட்டம் தயாராகி விட்டது. ஆனால் கையெழுத்திட வேண்டிய மத்திய அமைச்சர்கள் கர்நாடக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கின்றமையால் மத்திய அமைச்சரவைக்கு அனுப்ப முடியவில்லை என மத்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதை ஏற்க மறுத்த உச்ச நீதிமன்றம் கர்நாடகாவில் தேர்தல் நடப்பது குறித்து எங்களுக்கு அக்கறை இல்லை. எதிர்வரும் 8 ஆம் திகதிக்குள் (இன்று) மத்திய அரசு வரைவு திட்டத்தை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டது.

ஏற்கெனவே அறிவித்தபடி உடனடியாக தமிழகத்திற்கு 4 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகம் திறந்து விட வேண்டும். இல்லாவிட்டால் கடுமையான விளைவுகளை சந்திக்க வேண்டி இருக்கும் என எச்சரித்தது. இந்த வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வர உள்ளது.

இந்த நிலையில், கர்நாடக அரசு சார்பில் காவிரி நீர் தொடர்பாக பிரமாண பத்திரம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அதில், ''தமிழகத்திற்கு எங்களால் காவிரி நீரை திறந்து விட முடியாது. எங்களது அணைகளில் போதிய அளவிற்கு தண்ணீர் இல்லை. குடிப்பதற்கே தண்ணீர் இல்லை. தமிழகத்திற்கு கூடுதலாகவே தண்ணீர் திறந்து விட்டுள்ளோம். போதிய தண்ணீர் இல்லாதமையால் உத்தரவை நிறைவேற்ற முடியவில்லை'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கர்நாடகாவின் மனுவைத் தொடர்ந்து தமிழகம் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவில், கர்நாடக அணைகளில் தற்போது 19 டி.எம்.சி தண்ணீர் உள்ளது.

அதில், 4 டி.எம்.சி தண்ணீரை உடனடியாக திறக்க வேண்டும். கால தாதமம் இன்றி உடனடியாக காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க உத்தர விட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல் நாகரிகமின்றி பேசுகின்றார் மோடி!

## கர்நாடக முதல்வர் குற்றச்சாட்டு

பிரதமர் நரேந்திர மோடி அரசியல் நாகரிகமின்றி பேசுகிறார் என்று கர்நாடக முதல்வர் சித்தராமையா குற்றம்சாட்டியுள்ளார்.

பிரதமர் மோடி அண்மையில் பேசியபோது, முதல்வர் சித்தராமையா தலைமையிலான அரசை 'சீத்தா ரூபய்யா சர்க்கார்' என்று விமர்சனம் செய்தார். அதாவது பணத்துக்காக செயற்படும் ஊழல் அரசு என்ற அர்த்தத்தில் பிரதமர் கருத்து தெரிவித்தார். மேலும் 10 சதவீதம் கமிஷன் வாங்கும் அரசு என்று மோடி விமர்சனம் செய்து வருகிறார்.



இதுகுறித்து முதல்வர் சித்தராமையா கூறியபோது-

தனிநபர் விமர்சனத்தைத் தவிர்ப்பது அரசியல் நாகரிகம். ஆனால் அந்த மரபை மீறி பிரதமர் மோடி பேசி வருகிறார். அவரது பதவிக்கு அவர் தரம் தாழ்ந்து பேசுவது அழகல்ல.

பிரதமரின் அரசியல் நாகரிகமற்ற கருத்துகளுக்கும், பொய்களுக்கும் பதில் அளிக்க வேண்டாம் என்றே கருதினேன். ஆனால் அவர் சொல்வது உண்மை என்று நம்பி மக்கள் ஏமாந்துவிடக் கூடாது. அதற்காகவே பிரதமரின் விமர்சனங்களுக்குப் பதில் அளித்து வருகின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஜெயலலிதாவின் நினைவிடம் ஓராண்டில் கட்டி முடிக்கப்படும் - முதல்வர் எடப்பாடி

சென்னை, மே 08

ஜெயலலிதா நினைவிடம் ஓராண்டிற்குள் கட்டிமுடிக்கப்படும் என்று தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

சென்னை மெரீனா கடற்கரையில் அமைந்திருக்கும் எம். ஜி. ஆர். நினைவிட வளாகத்தில், முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கான நினைவிடம் எழுப்புவதற்காக நேற்று அடிக்கல் நடும் விழா நடைபெற்றது.



கடந்த 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மரணமடைந்தார். அவரது உடல், மெரினா கடற்கரையில் அமைந்துள்ள எம்.ஜிஆர். நினைவிட வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

அந்த இடத்திலேயே ஜெயலலிதாவுக்கு நினைவுமண்டபம் அமைக்கப்படும் என்று தமிழக அரசு கடந்த ஆண்டு ஜுன் மாதம் அறிவித்தது.

அத்துடன், இந்த மண்டபம் கட்டுவதற்காக சுமார் 50.80 கோடி ரூபா அளவில் ஒப்பந்தம் கோரப்பட்டது. அதைத் தொடர்ந்து நேற்றுக் காலையில் மெரீனாவில் ஜெயலலிதாவின் நினைவு இடத்தில் மண்டபத்திற்கான அடிக்கல் நடும் விழா தொடங்கியது.

இதற்கான யாகசாலை பூசைகள் காலை 6.30 மணி அளவில், நடைபெற்றது.

இதில், முதலமைச்சர் பழனிச்சாமி, துணை முதலமைச்சர் ஓ பன்னீர் செல்வம் ஆகியோர் பங்குபற்றினர். இவர்களுடன் அமைச்சகள் கடம்பூர் ராஜு, காமராஜ், செங்கோட்டையன், வேலுமணி, சண்முகம், செல்லூர் ராஜு, மாஃபா பாண்டிய ராஜன் உள்ளிட்டோரும் பங்குபற்றினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, 'ஜெயலலிதா நினைவிடம் ஓராண்டிற்குள் கட்டிமுடிக்கப்படும்.' என்று தெரிவித்தார்.

இதனிடையே இது குறித்து அக்கட்சியின் மூத்த நிர்வாகிகள் சிலர், ஜெயலலிதாவின் நினைவிடம் அவரின் இரண்டாவது நினைவு தினமான இந்த ஆண்டு டிசெம்பர் 5 ஆம் திகதியன்று கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படும் என்றும், ஜெயலலிதா வாழ்ந்த வேதா இல்லத்தை அவரின் பிறந்த நாளான பெப்ரவரி 24 ஆம் திகதியன்று பொதுமக்கள் பார்வைக்குத் திறக்கப்படும் என்றும் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கர்நாடகாவில் சோனியா பிரசாரம்

## *2 ஆண்களுக்குப் பின் அரசியல் களம் காண்கிறார்*

அரசியலில் ஒதுங்கியிருந்த காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி 2 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் களத்துக்கு வருகிறார். கர்நாடகாவில் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து இன்று முதல் அவர் பிரசாரம் மேற்கொள்கிறார்.



கர்நாடகாவில் எதிர்வரும் 12 ஆம் திகதி சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெறுகிறது. இதற்காக காங்கிரஸ், பா.ஜ.க., ம.ஜ.த. கூட்டணி உள்ளிட்ட கட்சிகள் பல்வேறு வியூகங்களை வகுத்துள்ளன. பா.ஜ.க. சார்பில் பிரதமர் நரேந்திர மோடி, பா.ஜ.க. தேசிய தலைவர் அமித்ஷா, மத்திய அமைச்சர்கள், பா.ஜ.க ஆளும் 22 மாநிலங்களின் முதல்வர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கு போட்டியாக காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, கர்நாடக முதல்வர் சித்தராமையா, முன்னாள் மத்திய அமைச்சர்கள் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், பா.ஜ.கவின் நட்சத்திர பிரசாரத்துக்கு காங்கிரஸ் ஈடுகொடுக்க முடியாமல் தடுமாறுகிறது. எனவே காங்கிரஸ் மேலிடம் முன்னாள் தலைவர் சோனியா காந்தி, அவரது மகள் பிரியங்கா காந்தி உள்ளிட்டோரைக் களமிறக்க முடிவெடுத்துள்ளது.

## *கடந்த 3 ஆண்டுகளில் மட்டும்*

# ஒடிசாவில் பாம்பு கடித்து ஆயிரத்து 716 பேர் பலி!

ஒடிசாவில் கடந்த 3 ஆண்டுகளில் பாம்பு கடித்து ஆயிரத்து 716 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதுகுறித்து புவனேஸ்வரில் பேட்டியளித்த சிறப்பு நிவாரண துணை கமிஷனர் பி.ஆர். மொஹாபத்ரா கூறுகையில்;- ''ஒடிசாவில் கடந்த 3 ஆண்டுகளில் பல்வேறு பேரிடர்களில் 4 ஆயித்து 689 பேர் இறந்துள்ளனர். இதில் 1,716 பேர் பாம்பு கடித்து இறந்துள்ளனர். இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கையில் இது 37 சதவீதம் ஆகும்.



பாம்பு கடிப்பது மாநிலத்தின் குறிப்பிடத்தக்க பேரிடர் என்று மாநில அரசு அறிவித்துள்ளது. இறந்தவர்களின் குடும்பங்களுக்கு 4 லட்சம் ரூபா நஷ்டஈடு என்றும் சட்டம் இயற்றியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றும் பிரதேச சபைக்குட்பட்ட காணியாகும். அது எனது உள்ளூராட்சி அமைச்சுக்குக் கீழ் வருகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை அனைத்துத் தமிழ்க் கட்சிகள் - பொது அமைப்புக்களுடன் இணைந்து நடத்துவது என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்திருந்தது. அந்த நிகழ்வைப் பேரெழுச்சியுடன் நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முன்னெடுத்துள்ளது.

இந்த நிலையிலேயே வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவது தொடர்பில் ஆராய்வதற்கான கூட்டம் வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் அவைத் தலைவர், மாகாண அமைச்சர்கள், மற்றும் உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தின் நிறைவில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த முதலமைச்சர்,

கடந்த 3 ஆண்டுகளாக முன்னெடுத்தமை போன்று மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை வடக்கு மாகாண சபையே ஒழுங்கு செய்து நடத்தும். இதுவே மாகாண சபையின் பெரும்பாலான உறுப்பினர்களின் விருப்பமும்.

எமது இனத்துக்கு ஏற்பட்ட பேரவலத்தை நினைவுகூரும் நிகழ்வை எம்முடன் இணைந்து முன்னெடுக்கப் பொது அமைப்புக்கள் பல முன்வந்துள்ளன.

நினைவேந்தல் நிகழ்வை ஒழுங்குபடுத்த மாகாண சபை உறுப்பினர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழு நாளை புதன்கிழமை மு.ப. 11.30 மணிக்குக் கூடி ஒன்றுபட்டு அனைவரும் நினைவேந்தல் நிகழ்வை முன்னெடுப்பது பற்றி ஆராயும். கைதடியிலுள்ள முதலமைச்சர் மாநாட்டு மண்டபத்தில் இந்தக் கூட்டம் இடம்பெறும்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை மாகாண சபையுடன் இணைந்து நடத்த விரும்பும் பொது அமைப்புக்களின் சார்பில் தலா 2 பிரதிநிதிகளை இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்துவது தொடர்பில் எம்முடன் பேச்சு நடத்தினர். அவர்கள் தாங்கள் இந்த நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு விரும்பம் கொண்டிருப்பதை அறிந்தேன்.

கடந்த ஆண்டு 4 இடங்களில் நடைபெற்றமை போன்று அல்லாமல் ஒரே இடத்தில் நினைவேந்தலை நடத்தத் தாம் சகல ஒழுங்குகளையும் முன்னெடுப்பதாகப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்தனர்.

எனினும் வடக்கு மாகாண சபை ஜனநாயக முறையில் நிகழ்வை நடத்தும் என்பதை அவர்களுக்கு எடுத்துக் கூறினேன்.

நினைவேந்தலை எவ்வாறு நடத்தவேண்டும் என்ற ஒழுங்கு முறையைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் எமிடம் கூறினர். அவர்களின் திட்டத்தை நாளை புதன்கிழமை நடைபெறும் கூட்டத்தில் எடுத்துக்கூறுமாறு அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். - என்றார். (ஐ-7)

## லஞ்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

இந்த இரு அதிகாரிகளை இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் கையும் களவுமாகக் கைது செய்தனர்.

கந்தளாய்சீனி நிறுவனத்தை 30 வருட குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளக் கடந்த 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முன்வைத்த விலை மனுக் கோரலுக்கு அமைய சீனி நிறுவனத்தின் நிர்வாக உரிமை இந்திய நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

எனினும் அப்போது காணி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்த ஐ.எச். மஹாநாம, சீனி நிறுவனம் இந்திய நிறுவனத்துக்கு வழங்கப்பட்டமைக்குத் தொடர்ந்தும் எதிர்ப்பை வெளியிட்டு வந்துள்ளார்.

இது சம்பந்தமாக அந்த நிறுவனம் சிங்கப்பூரில் உள்ள சர்வதேசத் தீர்ப்பாயத்துக்குச் சென்று உத்தரவொன்றைப் பெற்றுக் கொண்டது. எனினும் மஹாநாம தொடர்ந்தும் இந்திய நிறுவனத்திடம் 540 மில்லியன் ரூபாவை இலஞ்சமாகக் கோரி வந்துள்ளார்.

கடந்த உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் பிரசாரத்துக்காகக் கந்தளாய் சென்றிருந்த பிரதமர் ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்த இந்திய நிறுவனத்தின் அதிகாரிகள் இது குறித்து தெரியப்படுத்தியுள்ளனர்.

இதற்குப் பதிலளித்துள்ள பிரதமர், விடயம் சம்பந்தமாக ஜனாதிபதி மற்றும் காணி அமைச்சருக்கு எழுத்து மூலம் அறிவிக்குமாறு ஆலோசனை வழங்கியிருந்தார்.

எனினும் இதற்கு ஜனாதிபதியிடம் இருந்தோ ஜனாதிபதி செயலகத்திடம் இருந்தோ பதில் கிடைக்கவில்லை. இதனையடுத்து இரண்டு மாதங்களுக்குப் பின்னர் ஜனாதிபதி, மஹாநாம என்ற அதிகாரியைத் தனது பணியாளர் குழுவின் தலைமை அதிகாரியாக நியமித்துள்ளார்.

இதன் பின்னர் அந்த அதிகாரி பெரும் தொகையை இலஞ்சமாகக் கோரி வந்துள்ளார். இதனையடுத்து இந்திய நிறுவனம் அது குறித்து மீண்டும் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

இதற்கு அமையப் பிரதமரின் செயலகம், இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் அதிகாரிகள் ஊடாகச் சுற்றிவளைப்புக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

ஆணைக்குழுவின் ஆலோசனைக்கு அமைய அந்த அதிகாரி கோரிய 540 மில்லியன் இலஞ்சப் பணத்தில் முற்பணமான 20 மில்லியன் ரூபா பணத்தை 5 ஆயிரம் ரூபா நாணயத்தாள்களாக இரண்டு கட்டுகளாக இந்திய நிறுவனம் மஹாநாமவிடம் கையளித்துள்ளது.

மஹாநாம மற்றும் அரச மரக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆகியோர் ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான வாகனத்தில் வைத்துப் பணத்தை எண்ண ஆரம்பிக்கும்போது ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மஹிந்தவுடன்...

(முதலாம்பக்கத்தொடர்ச்சி)

பண்டு பண்டாரநாயக்க நேற்று மஹிந்த ராஜபக்ஷ அணியுடன் உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்டார்.

காலியில் நேற்று நடைபெற்ற கூட்டு எதிரணியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் தனது ஆதரவை வெளிக்காட்டியுள்ளார்.

அத்துடன், அவரது ஆதரவாளர்கள் 500 பேரும் கூட்டு எதிரணியுடன் இணைந்து கொண்டுள்ளனர் எனக் கூறப்பட்டது. (ஐ)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாமல் ராஜபக்ஷ தலைமையில் மஹிந்த அணியினரின் மே தின ஊர்வலம் இடம்பெற்றது.

இதன்போது, அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறு, நடு வீதியில் பெருமளவானோர் திரண்டு இந்த ஊர் வலத்தை நடத்தினர்.

குறிப்பாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திருடன் என்றும், அரசைக் கவிழ்த்து மீண்டும் ஆட்சிபீடமேறுவோம் என்றும், செயற்றிறன் மிக்க ஆட்சியே அவசியம் என்றும், அதனை மஹிந்த தலைமையில் ஏற்படுத்துவோம் என்றும் நாமல் ராஜபக்ஷ கோஷமெழுப்ப, அவரது ஆதரவாளர்கள் தொடர்ந்து கோஷமெழுப்பினர்.

ஊர்வலமாகச் சென்றவர்கள், காலி சமனல விளையாட்டரங்கை அடைந்து அங்கு மே தினக் கூட்டம் நடைபெற்றது. (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாடலின் பின்னர் நடத்திய ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது பல விடயங்கள் குறித்துப் பேசப்பட்டு வருகின்றன. ஆகவே அவற்றுக்கெல்லாம் சரியான கால நேரங்கள் வருகின்றபோது போதுமான விளக்கமும் அறிக்கைகளும் கொடுக்கப்படும். ஆகவே அதுவரை அனைவரும் நன்றாக இருங்கள். - என்றார். (ஐ-7)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேப்பாபிலவில் 433 ஆவது நாளாகப் போராட்டம் மேற்கொண்டு வரும் ஆறுமுகம் வேலாயுதபிள்ளை நேற்று இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கட்சி பேதம் இன்றி மக்களுடன் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை உறுதியாகச் செய்யவேண்டும். எங்களுக்குள் பிரிவினைகள் இருக்கக் கூடாது. நாங்கள் ஒற்றுமையான தமிழர் என்பதை உலக நாடுகள் அறியவேண்டும்.

அரசியல் தலையீடு இல்லாமல் முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வை நடத்த வேண்டும். இந்த நாளைப் புனித நாளாகக் கொண்டாட வேண்டும். எங்கள் உறவுகளான உயிரிழந்த அனைத்து ஆத்மாக்களும் முள்ளிவாய்க்கால் மண்ணில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த ஆத்மாக்கள் நிம்மதி அடைய வேண்டும்.

இந்த முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வில் பிரிவினை காட்டாமல் அனைவரும் ஒற்றுமையை வெளிப்படுத்தவேண்டும். - என்றார். (ஐ)

## இளைஞர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிசேன தெரிவித்தார்.

இதற்கு முன்னர் இருந்த அரசுகள் அதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவில்லையெனவும் அவர் குற்றம் சாட்டினார்.

மட்டக்களப்பில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டின் இளைஞர் கள்துப்பாக்கி ஏந்தாத நிலையை நாங்கள் ஏற்படுத்தவேண்டும். இதற்கு முன்னர் அதற்கான வேலைத்திட்டங்கள் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால், எமது அரசு பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. எமது அரசில் பல குறைபாடுகள் உள்ளன. அவற்றை நீக்கி அரசைச் சக்திமிக்கதாக மாற்ற வேண்டும்.

இந்த நாட்டில் உண்மையான, நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தச் சகல அரசியல் கட்சிகளும் அரசியல் தலைவர்களும் நேர்மையாகவும், அர்ப்பணிப்புடனும், பொறுப்புடனும் பணியாற்ற வேண்டும்.

அதிகாரத்தில் இல்லாதவர்கள் எதனையும் சொல்வார்கள். ஆனால், பிரச்சினைகள் தொடர்பாகப் புரிந்துகொள்ள வேண்டும். பொதுமக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கடந்த மூன்று வருட காலமாகப் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம்.

தற்போது நிலவும் வறட்சி தொடர்பில் கரிசனை கொண்டுள்ளோம். எமது நாட்டை விட இந்தியாவில் அதிக வறட்சி காணப்படுகின்றது. உலகின் பல நாடுகளில் காணப்படும் பிரச்சினைகளை, அனுபவங்கள் மற்றும் அறிவின் மூலமாகவே அந்நாட்டவர்கள் வெற்றி கொள்கின்றனர். அதனைப் புரிந்துகொண்டு நாம் செயற்பட வேண்டும்.

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் ஓய்வுபெற போகிறீர்களா எனச் சிலர் கேட்கின்றனர், சமூக வலைத்தளங்களிலும் அது பதிவேற்றப்படுகின்றது. எனினும் 2020 ஆம் ஆண்டு ஓய்வுபெறுவதற்கு முன்னர்தான் செய்ய வேண்டிய பல வேலைகள் இருக்கின்றன.

இலங்கையில் நேர்மையான அரசியல்வாதிகள் எத்தனை பேர் இருக்கின்றனர்? கொள்ளையடிக்காத அரசியல்வாதிகள் எத்தனை பேர் உள்ளனர்?

சிலர் 2020 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வரக் கனவு காண்கின்றனர். எனினும் அவர்களிடம் சரியான எந்த வேலைத் திட்டங்களும் இல்லை.

இவர்கள் நாட்டின் வறிய மக்களது உணர்வுகளைப் புரிந்து கொள்வதில்லை. அரசியல் நாடியைப் புரிந்துகொள்ள வேண்டும். தேவலோகம் குறித்து பலருக்குப் பேசவும் கனவு காணவும் முடியும்.

எனினும் வறிய மக்கள் பற்றி அவர்களுக்கு அனுதாபம் இல்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேசிய ஐக்கியம், நல்லிணக்கம் உள்ள தெளிவான வேலைத்திட்டத்துடன் முன்னோக்கிச் செல்லும்.

இந்தப் புதிய வேலைத்திட்டத்திற்கு உதவுமாறு அனைவரிடமும் கோரிக்கை விடுக்கிறேன். என்றார். (ஐ)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்குக்குச் சிங்கள அரச அலுவலர்கள் நியமிக்கப்படுவது தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எங்களி ◌ பல வேலைகளுக்கு அ ◌லர்கள் இல்லை. அவ்வாறான நிலையில் அரசுக்கு இருக்கும் உரித்துக்களுக்கமைய அவர்கள் வெளியிலிருந்து ஆள்களைக் கொண்டு வருகின்றனர். அது எமக்கொரு பெரிய பிரச்சினை யாக இருக்கிறது. அரசுடன் சேர்ந்து கலந்தாலோசித்து முடிவெடுக்கவேண்டிய விடயம் இது.

ஆனால் அவ்வாறு செய்யாது அரசு தன்னிச்சையாகத் திட்டமிட்ட வகையில் தென்னிலங்கைச் சிங்கள அலுவலர்களை வடக்குக்கு நியமித்து வருகிறது,

குறிப்பாக மன்னார், வவுனியா மாவட்டங்களில் சிங்களவர்களை அரச அதிபர்களாக நியமித்திருக்கின்றனர். தற்போது தமிழ் இடங்களில் சிங்கள அலுவலர்களையும் சிங்கள இடங்களில் தமிழ் அலுவலர்களையும் நியமிக்கிறோம் எனக் கூறி இங்கு அதிகளவிலான சிங்களவர்களைக் கொண்டு வருகின்றனர்.

வடக்கு மாகாணத்துக்கு அவ்வாறு சிங்கள அலுவலர்களை அனுப்ப வேண்டுமென்றால் யாழ்ப்பாணத்துக்கு அல்லது கிளிநொச்சிக்கு அனுப்பவேண்டும். அதை விடுத்து ஏன் முல்லைத்தீவுக்கும் மன்னாருக்கும், வவுனியாவுக்கும் அனுப்ப வேண்டும். அவர்களை அங்கே நியமிப்பதால் தான் பலவிதமான குடியேற்றங்களும் நடக்கின்றன.

தமிழ் இடங்களில் சிங்கள அலுவலர்களையும் சிங்கள இடங்களுக்குத் தமிழ் அலுவலர்களையும் நியமிப்பதாயின் அந்தச் சிங்கள அலுவலர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைக்கின்றேன். அவர்கள் இங்கிருந்து தங்கள் வேலையைச் செய்யட்டும். மன்னார், வவுனியா, முல்லைத்தீவில் வேலை செய்யத் தேவையில்லை. அங்கு எங்கள் தமிழ் அலுவலர்கள் இருந்து வேலை செய்யட்டும். - என்றார். (ஐ-7)

## விக்கிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த முதலமைச்சர் 'என்னை ஜனாதிபதியாக்கி விடுங்கள்' என்று கூறினார் (ஐ-7)

## தன்னைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் நிலையத்துக்கு எதிரில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியமை தொடர்பில் புளத்சிங்களப் பிரதேச சபையின் தற்போதைய எதிர்க் கட்சித் தலைவரைப் பொலிஸார் கைது செய்ததை காரணமாகப் பிரதியமைச்சர் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

சுமார் நான்கு மணி நேரம் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது.

அண்மையில் தான் உட்பட 35பேர் பொலிஸ் நிலையத்துக்கு எதிரில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியதாகவும், பிரதான சந்தேக நபரான தன்னைக் கைது செய்யுமாறு கோரிப் பிரதியமைச்சர் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினார். (ஐ)




# சம்பியனாகியது மானிப்பாய் ஏஞ்சல்




தமது கல்லூரியின் மறைந்த முன்னாள் கூடைப்பந்தாட்ட வீரர் ஜெயக்குமார் கீர்த்திகன் ஞாபகார்த்தமாக, யாழ். மாவட்ட பாடசாலைகளின் ஆண்கள், பெண்கள் கூடைப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் கொக்குவில் இந்துக் கல்லூரி தமது கூடைப்பந்தாட்டத் திடலில் நடத்திய கூடைப்பந்தாட்டத் தொடரில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை சம்பியனாகியது.

10 பாடசாலைகள் பங்குபற்றிய இத்தொடரின் அரையிறுதியில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை, கொக்குவில் இந்துக் கல்லூரியை வென்றும் யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரியை வென்றும் இறுதிப் போட்டிக்குள் நுழைந்தன.

இந்நிலையில், நேற்று முன் தினம் இடம்பெற்ற யாழ். மத்திய கல்லூரிக்கெதிரான இறுதிப் போட்டியின் முதற் காற்பகுதி மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப்பாடசாலையின் கைகளில் இருக்க அந்தப் பாடசாலை, 21-13 என்ற புள்ளிகள் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது காற்பகுதியில், யாழ். மத்திய கல்லூரி சிறப்பாக விளையாடியபோதும் இக் காற்பகுதி முடிவிலும் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை, 31-25 என்ற புள்ளிகள் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

மூன்றாவது காற்பகுதியில் ஆதிக்கத்தை வெளிப்படுத்திய மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை, இக்கால்பகுதி முடிவில் 43-33 என்ற புள்ளிகள் கணக்கில் முன்னிலை வகித்தது.

இந்நிலையில், நான்காவது கால்பகுதி யாழ். மத்திய கல்லூரியின் கைகளில் இருந்தது. அடுத்தடுத்து, புள்ளிகளைப் பெற்ற யாழ். மத்திய கல்லூரி ஒரு கட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலையின் புள்ளிகளை முந்திய நிலையில் இருந்தது. எனினும், இறுதி செக்கன்களில் தங்கள் வெற்றிக்குத் தேவையான புள்ளிகளைப் பெற்ற மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை, 57-56 என்ற புள்ளிகள் கணக்கில் இறுதியில் வென்று, மூன்றாவது முறையாக இத்தொடரில் தொடர்ச்சியாக சம்பியனாகியது.

இவ்விறுதிப் போட்டியில் 26 புள்ளிகளைப் பெற்ற மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலையின் யோகநாதன் சிம்ரோன் இறுதிப் போட்டியின் நாயகனாகவும் யாழ். மத்திய கல்லூரியின் உதயகுமார் சங்கீர்த்தனன் தொடரின் நாயகனாகவும் தெரிவாகினர்.

# வென்றது ஜுவென்டஸ்



இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் இலங்கை நேரப்படி நேற்றுமுன் தினம் அதிகாலை இடம்பெற்ற போட்டியில் பொலொக்னா அணியை ஜுவென்டஸ் வென்றது.

இப்போட்டியின் 30ஆவது நிமிடத்தில், பொலொக்னா அணியின் லொரென்ஸோ கிறைஸ்டிக்கை தமது பெனால்டி பகுதிக்குள் ஜுவென்டஸின் டானியல் ருகனி வீழ்த்தப்பட வழங்கப்பட்ட பெனால்டியை சிமோனே வேர்டி கோலாக்கப் பொலொக்னா அணி முன்னிலைப் பெற்றது. இதையடுத்து முதற்பாதியில் கோல் எண்ணிக்கையைச் சமப்படுத்தும் வாய்ப்புகளை ஜுவென்டஸின் குவாடோ அஸமோகா, கொன்ஸலோ ஹியூகைன் ஆகியோர் கொண்டிருந்தபோதும் அவர்கள் கோல்களைப் பெறாத நிலையில், முதற்பாதியை முன்னிலையுடன் பொலொக்னா அணி முடித்துக் கொண்டது.

தொடர்ந்த இரண்டாவது பாதியில், பொலொக்னா அணியின் வீரர் செபஸ்டிய டி மையோ தனது அணியின் கோல் கம்பத்துக்குள்ளேயே போட்டியின் 51ஆவது நிமிடத்தில் பந்தைச் செலுத்த கோல் எண்ணிக்கை சமமானது. இதையடுத்து, பொலோக்னா அணியில் எமில் கிராப்த்தின் உதையொன்றை ஜுவென்டஸின் கோல் காப்பாளராக ஜல்லூயிஜி புபான் தடுத்திருந்தார்.


தொடர்ந்த ஆட்டத்தில், ஓவ்ண் கோல் பெறப்பட்ட 12ஆவது நிமிடத்தில், கோல் கம்பத்துக்கு அருகிலிருந்து சமி கெதீரா பெற்ற கோலால் முன்னிலை பெற்ற ஜுவென்டஸ், அடுத்த ஆறாவது நிமிடத்தில் போலோடிபாலா பெற்ற கோலோடு இறுதியில் 3-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

# டோனியின் நிழலாக இருக்கிறார் அஸ்வின்

## ஆரோன் பிஞ்ச் புகழாரம்

ஐ.பி.எல். போட்டியில் பஞ்சாப் அணியின் தலைவர் அஸ்வின் அமைதியான முறையில் தனது பதவியைக் கையாளுகிறார் என ஆஸ்திரேலிய வீரர் ஆரோன் பிஞ்ச் புகழாரம் சூட்டியுள்ளார்.

அஸ்வினின் தலைமையின் கீழ் விளையாடுவது சிறந்த அனுபவமாகும். சுழற்பந்து வீரரான அவர் அணியை குழுவாக அமைத்து ஊக்குவிப்பதில் அபாரமாகச் செயல்படுகிறார்.




அவர் மேலும் கூறுகையில்-

இக்கட்டான நேரத்தில் அவர் சரியான முறையில் கையாள்கிறார். அவர் அமைதியான முறையில் திட்டத்தை செயல்படுத்துகிறார். இதை அவர் டோனியிடம் இருந்து தவிர-வேறு யாரிடமும் கற்று இருக்க முடியாது. கேப்டன் பதவியில் டோனியின் நிழலாக அஸ்வின் உள்ளார். வெற்றிகரமான கிரிக்கெட் வீரரான அவரது முடிவுக்கு டோனியின் செயல்பாடே காரணமாக இருக்கிறது.-என்றார்.

# புதிய மைல்கல்லை எட்டினார் உத்தப்பா

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் விக்கெட் கீப்பர் ரொபின் உத்தப்பா ஐ.பி.எல். போட்டிகளில் 4 ஆயிரம் ஓட்டங்களை கடந்து புதிய மைக்கல்லை எட்டியுள்ளார்.

ஐபிஎல் தொடரின் நேற்றுமுன்தினம் 37ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதிய நிலையில் மும்பை அணி வெற்றி பெற்றது.



இந்தப் போட்டியில் சிறப்பாக விளையாடிய கொல்கத்தா அணி வீரர் உத்தப்பா 54 ஓட்டங்கள் எடுத்தார்.

இதில் 17 ஓட்டங்களை எடுக்கும்போது உத்தப்பா புதிய மைல்கல்லை எட்டினார். அவர் ஐ.பி.எல். போட்டிகளில் 4 ஆயிரம் ஓட்டங்களை கடந்த ஆறாவது வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

இதுவரை 153 ஐ.பி.எல் போட்டிகளில் துடுப்பாட்டம் செய்த ரொபின் உத்தப்பா 4037 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

# பெர்கியுஸனுக்கு அவசர சத்திர சிகிச்சை

மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசிவொன்றுக்காக, இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைடெட்டின் முன்னாள் முகாமையாளரான அலெக்ஸ் பெர்கியூஸனுக்கு அவசர சத்திர சிகிச்சையொன்று நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டது.



இந்நிலையில், அலெக்ஸ்பெர்கியூஸனுக்கான சிகிச்சை மிகவும் வெற்றிகரமாக அமைந்ததாகவும் ஆனால் அலெக்ஸ்பெர்கியூஸன் மீண்டு வருவதற்கு குறிப்பிட்ட காலத்துக்கு தீவிரமாகச் சிகிச்சை பெறவேண்டும் என்றும் அறிக்கையொன்றில் மன்செஸ்டர் யுனைட்டெட் தெரிவித்துள்ளது.

1986ஆம் ஆண்டிலிருந்து 2013ஆம் ஆண்டு வரை மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முகாமையாளராகவிருந்த 76 வயதான அலெக்ஸ் பெர்கியூஸன் 13 பிறீமியர் லீக் பட்டங்களை வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

Rajasthan Royals v Kings XI Punjab
இன்று
08.05.2018
இரவு 8.00 மணி

காலைக்கதிர் Kalaikkathir



# 2020 இல் புதிய பயணம்

## அமைச்சர் சம்பிக்க அறிவிப்பு



சில அராஜககார்கள் தமது வேலைகளைச் செய்துக்கொள்வதற்காக நாங்கள் 2014 ஆம் ஆண்டு புதிய அரசை அமைக்கவில்லை. இவர்களுடன் தொடர்ந்தும் செல்ல முடியாது. 2020 ஆம் ஆண்டு புதிய முன்னணியின் ஊடாகப் புதிய பயணத்தை ஆரம்பிப்போம்.

– இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நேற்று நடைபெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த அரசு நாட்டு மக்களின் பணத்தைத் தனது விருப்பம் போல் பல்வேறு திட்டங்களுக்குப் பயன்படுத்தியது. அந்தப் பணம் எந்தளவுக்கு மீண்டும் முதலீடாக மாறும் என்பதை ஆராயவில்லை. செலவு மட்டுமே செய்யப்பட்டது.

குறிப்பாக அதிவேக நெடுஞ்சாலைகளை நிர்மாணிக்கப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு நான்கு வழிச் சாலைகளை அமைத்தனர். அந்தப் பணத்தைச் செலவிட்டு எத்தனை சாதாரணமான வீதிகளை நிர்மாணித்திருக்க முடியும். இந்த நெடுஞ்சாலைகள் எந்தளவுக்கு நாட்டுக்கு – மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதை ஆராயவில்லை. பொய்யான கண்காட்சிகளையே நடத்தினர்.

தற்போதும் அப்படித்தான் குருநாகலில் இருந்து கலகெதரவுக்கு அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்படுகிறது. கண்டிக்கு ஒரு மணி நேரத்தில் செல்லலாம் என்றுதான் அது நிர்மாணிக்கப்படுகிறது. இவை அனைத்தும் பொய்யான கண்காட்சிகள். மக்களுக்குப் பிரயோசனமானவற்றைச் செய்யவேண்டுமே தவிர இரண்டு மூன்று பேரின் தேவைகளை நிறைவேற்றக் கூடாது.

நாங்கள் 2015 ஆம் ஆண்டு உயிரைப் பணயம் வைத்து புதிய அரசை அமைத்தோம். சில அராஜகக்காரர்கள் நாட்டு மக்களின் பணத்தைப் பயன்படுத்தி வியாபாரம் செய்ய ஆரம்பித்தனர். நாட்டு மக்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தையே இவர்கள் தமது வியாபாரத்திற்குப் பயன்படுத்தினர்.

இது நாட்டு மக்களுக்காக அபிவிருத்திப் பணிகளைச் செய்வதற்காக இருந்த பணம். இதனால், இப்படியானவர்களுடன் இணைந்து தொடர்ந்தும் செல்ல முடியாது. நாங்கள் 2020 ஆம் ஆண்டில் புதிய முன்னணியை உருவாக்குவோம். அதன் ஊடாக புதிய பயணத்தை ஆரம்பிப்போம். புதிய அரசியல் கலாசாரத்தை நாங்கள் உருவாக்குவோம்– என்றார். (ஐ)

# ஐ.தே.க. பொதுச் செயலராக பதவியேற்றார் அகில விராஜ்



கொழும்பு, மே 08

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள அகில விராஜ் காரியவசம் நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

கடந்த 30ஆம் திகதி நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

அதற்கு முன்னர் நீண்ட காலமாக அவர் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் பதவியை வகித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்றுக் காலை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் வைத்து அமைச்சர் அகில விராஜ் கட்சியின் பொதுச் செயலாளர் பொறுப்புகளை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளார்.

இந்த வைபவத்தில் அமைச்சர்களான ஜோன் அமரதுங்க, காமினி ஜயவிக்கிரம பெரேரா, ரவி கருணாநாயக்க உள்ளிட்ட மூத்த அரசியல்வாதிகள் பலரும் பங்கேற்றனர். (ஐ)

# ஏ.எல். பரீட்சை வினாத்தாளுக்கு விடையளிக்க மேலதிக நேரம்

கொழும்பு, மே 08

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இரண்டாம் பகுதி வினாத்தாளுக்கு விடையளிக்க ஆரம்பிக்க முன்னர் வினாக்களை வாசித்துப்புரிந்துகொள்ள மேலதிக நேரத்தை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித தெரிவித்தார்.

க.பொ.த உயர்தர பரீட்சையின் போது பரீட்சை வினாத்தாளின் இரண்டாம் பகுதிக்கு விடையளிக்க மேலதிக நேரம் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் ஆராய்ந்தது.

அதனடிப்படையில் வினாத்தாளின் இரண்டாம் பகுதிக்கு விடையளிக்க ஆரம்பிப்பதற்கு முன்னர் வினாக்களை வாசித்துப்புரிந்துகொள்வதற்கு மேலதிக நேரம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஓகஸ்டில் நடைபெறும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் இருந்தே இதனை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# புதிய அரசமைப்பு தொடர்பில் விளக்கவேண்டும் ஜனாதிபதி

## துரைராஜசிங்கம் வேண்டுகோள்



மேதின நிகழ்வில் அல்ல நாடாளுமன்ற அமர்வில் புதிய அரசமைப்பு தொடர்பாக ஜனாதிபதி தெளிவுபடுத்த வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான கி.துரைராஜசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மே தினக் கூட்டம், நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

அரசமைப்பின் மீதி உருவாக்கம் எவ்வாறு அமையப்போகின்றது என்ற செய்தியைத் தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி கூற வேண்டும். அதன் அடிப்படையிலேயே தமிழ் தேசியக்கூட்டமைப்பின் அடுத்த கட்ட நகர்வும் முன்னெடுக்கப்படும்.

உரிமை எங்களுடைய இனத்தின் விடுதலையிலேதான் தங்கியிருக்கின்றது. இந்த நாட்டிலிருக்கின்ற சிங்களத் தொழிலாளியையும் தமிழ்த் தொழிலாளியையும் ஒன்றுசேர வைத்துக்கௌரவிக்கின்ற ஒரேயொரு இடமாக மேதின மேடைகள்தான் இருக்கின்றன.

அனைத்துத் தொழிற்துறைகளிலும் தமிழர்கள் தங்களுக்கெனத் தொழிற்சங்கங்களை வைத்திருந்த காலங்கள் உண்டு. தற்போது தேசிய தொழிற்சங்கங்களோடும் தேசிய கட்சிகளோடும் எங்களது தொழிற்சங்கங்கள் கரைந்துவிட்ட நிலையைக் காண்கின்றோம். – என்றார்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணியின் பிரதித் தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான இரா.துரைரெட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான கி.துரை ராஜசிங்கம் மற்றும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# பொன்சேகாவை அமைச்சர் பதவியிலிருந்து நீக்குங்கள்!

## மைத்திரியிடம் துமிந்த கோரிக்கை

கொழும்பு, மே 08

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மிகவும் அநாகரிகமாகப் பகிரங்கமாக விமர்சித்த அமைச்சர் சரத் பொன்சேகாவை உடனடியாக அமைச்சர் பதவியில் இருந்து நீக்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்க கோரியுள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று ஜனாதிபதியைச் சந்தித்த அமைச்சர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் நேற்று முன்தினம் இரவு ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் தவிசாளரான அமைச்சர் மலிக் சமரவிக்ரமவைத் தொலைபேசியில் தொடர்புக்கொண்ட துமிந்த திஸாநாயக்க, சரத் பொன்சேகாவின் கருத்து தொடர்பில் கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதி சம்பந்தமாக சரத் பொன்சேகா வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கோபத்தில் உள்ளார் என மலிக் சமரவிக்ரம குறிப்பிட்டுள்ளார்.

பொன்சேகா வெளியிட்ட கருத்து தொடர்பில் அவரை அலரி மாளிகைக்கு அழைத்துப் பிரதமர் விசாரித்தார் எனவும் எதிர்காலத்தில் இப்படியான கருத்துக்களை வெளியிடவேண்டாம் எனக் கேட்டுக்கொண்டார் என்றும் அமைச்சர் சமரவிக்ரம மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# வடக்கு ஆளுநர் கிழக்கு விஜயம்





மட்டக்களப்பு, மே 08

கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே மட்டக்களப்பு டான் தொலைக்காட்சி அலுவலகத்துக்கு நேற்றுக் காலை பயணம் மேற்கொண்டார்.

அங்கு அவரை டான் குழுமத் தலைவர் எஸ்.எஸ். குகநாதன் மற்றும் உத்தியோகத்தர்கள் வரவேற்றனர். வடக்கு மாகாண ஆளுநருடன் ஆளுநர் அலுவலக அதிகாரிகளும் உடனிருந்தனர்.

வடக்கு மாகாண ஆளுநர், தொடர்ந்து மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்துக்கும் விஜயம் செய்தார். மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளிலும் அவர் கலந்துகொண்டார். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.05.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது